# சுதந்திரன்
SUTANTIRAN

தொலைபேசி 23411 விலை: சதம் 60

வள்ளுவர் ஆண்டு 2005, கார்த்: 2 (17-11-74) ஞாயிறு நவ. 17 ஜுல்கஃ 2 புத்தகம் 28 இதழ் 13


## சூரியரை எதிர்த்து விசுவமடுவில் கடையடைப்பு!

கடந்த சில மாதங்களாக கிளிநொச்சி தொகுதி மீது திடீர் காதல்கொண்ட அமைச்சர் குமாரசூரியர் கிளிநொச்சியிலும் சுற்றுப் புறங்களிலும் பல நோக்குக் கூட்டுறவு சங்க லொறிகளில் ஊழியர்கள் பரிவாரம் சூழ்ந்துவர ஒவ்வொரு வார இறுதியிலும் உல்லாசப் பவனி வந்துகொண்டிருப்பது தெரிந்ததே. சூரியர் கடந்த 9.11.74இல் விஸ்வமடுவிற்கு விஜயம் செய்ய திட்டமிட்டார். இதனால் எங்கோ இருந்த ஓர் உப தபாற் கந்தோர் விஸ்வமடுவிற்கு இடமாற்றம் செய்யப்பட்டது. இதனைத் திறக்க

—5-ம் பக்கம் பார்க்க

## சிறையிருக்கும் தமிழ் இளைஞர் பிரச்சினை: 31-12-74 வரை காலக்கெடு!

# அவசரகாலச் சட்ட விதிகளை மீறி ஆயிரக்கணக்கானோர் கைதாவர்!

## அரசுக்குத் தமிழர் கூட்டணியின் இறுதி எச்சரிக்கை!

**அரசியல் காரணங்களுக்காக அவசரகாலச் சட்ட விதிகளின்கீழ் சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களின் பிரச்சினை சம்பந்தமாக தமிழர் கூட்டணி ஆட்சியாளருக்கு காலக்கெடு கொடுத்து இறுதி எச்சரிக்கை விடுத்துள்ளது. எதிர்வரும் டிசம்பர் 31ம் திகதிக்கு முன்னர் (31.12.74) சிறையிலிருக்கும் தமிழ் இளைஞர்களை ஒன்றில் விடுதலை செய்யவேண்டும்; அல்லது அவர்களை நீதி விசாரணைக்கு கொண்டுவரவேண்டும். இந்த இரண்டில் ஒன்றைச் செய்ய அரசு தவறுமானல், சனவரி முதல் வாரத்தில் அவசரகாலச் சட்டவிதிகளை மீறும் சட்டமறுப்பு நடவடிக்கைகளை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழர் கூட்டணி ஆரம்பிக்கும்! இந்தச் சட்டமறுப்பு போராட்டங்களில் தலைவர்களும் தொண்டர்களும் ஆயிரக்கணக்கில் கலந்துகொண்டு சிறைச்சாலைகளை நிரப்புவார்கள்!**

—இவ்வாறான தீர்மானம் கடந்த 9.11.74 சனிக்கிழமைகாலை யாழ்ப்பாணத்திலுள்ள தமிழர் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் கூட்டணித் தலைவர் தந்தை செல்வா அவர்கள் தலைமையில் நடைபெற்ற நடவடிக்கைக் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட்டது.



இத்தீர்மானத்தை விளக்கி தமிழ் ஈழம் முழுவதும் பிரச்சாரக் கூட்டங்களை நடத்தி சட்டமறுப்பு இயக்கத்துக்கு மக்களைத் தயார் செய்வது

### "சிறைச்சாலைகளை எமக்காக அரசு தயாராக்கட்டும்"

—'அமிர்'

என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

அவசரகாலச் சட்டத்தின் எந்த எந்த விதிகளை மீறுவது என்பது போராட்டக் குழுவினால் முடிவுசெய்யப்படும். நாள்தோறும் நடைபெறவுள்ள இந்தச் சட்டமறுப்பு போராட்டத்தில் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு தலைவரின் தலைமையின்கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட தொண்டர்கள் சட்டத்தை மீறிக் கைதாவார்கள். பல ஆயிரக்கணக்கானோர் கைதுசெய்யப்படுகிற வகையில் இப்போராட்டங்

—5-ம் பக்கம் பார்க்க

### காசி ஆனந்தன் சிறையில் இன்று 891 நாள்!

## இலண்டனில் தமிழ்திருமணம்!

'இலண்டன் முரசு' ஆசிரியர் திரு. மயில்வாகனம் சதானந்தன் அவர்களுக்கும், யாழ்ப்பாணம் ஆர். நல்லதம்பி அவர்களின் புதல்வியும் டாக்டர் என்.கந்தசாமி அவர்களின் சகோதரியுமான செல்வி ஞானேஸ்வரிக்கும் 1974ம் ஆண்டு நவம்பர் 15ம் நாள் காலை 8.30க்கும் 9.30க்கு மிடையேயுள்ள சுபமுகூர்த்த நேரத்தில் இலண்டன் விம்பிள்டன் நகரமண்டபத்தில் தமிழ் முறைப்படி திருமணம் நடைபெற்றது. திரு. சதானந்தன் இலங்கையைச்சேர்ந்த திரு. எஸ். சபாபதிப்பிள்ளை தம்பதிகளின் புதல்வர் என்பது தெரிந்ததே.

'இலண்டன் முரசு' ஆசிரியர் தம்பதிகளுக்குஇலங்கை வாழ் தமிழ் மக்கள் சார்பிலும், சுதந்திரன் வாசகர்கள் சார்பிலும் எமது சார்பிலும் இதயம் நிறைந்த வாழ்த்துக்களை சமர்ப்பிக்கிறோம்! வாழ்க மணமக்கள்!

—கோவை மகேசன்
ஆசிரியர் சுதந்திரன்.

### துரையப்பாவை தலைவராகக் கொண்ட யாழ் மாநகரசபை ப. நோ. கூட்டுறவுச் சங்கத்தில்

# 4000 கள்ள கூப்பன் மோசடி!

சிங்கள சுதந்திரக்கட்சியின் எடுபிடியும் யாழ் மேயருமான துரையப்பாவின் தலைமையிலுள்ள யாழ்ப்பாண மாநகர பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்தில் நடைபெற்ற மிகப் பெரிய ஊழல் தற்பொழுது அம்பலத்துக்கு வந்துள்ளது.

ஒரு காலத்தில் யாழ்ப்பாணம் கூட்டுறவுத் துறையில் இலங்கைக்கே வழிகாட்டியாக நின்றதையும் அதனால் தமிழ் மக்கள் பெருமைப் பட்டதையும் இந்த நாடறியும். ஆனால் இன்றோநிலைமை தலைகீழாக மாறியுள்ளது. முழு இலங்கைக்கே யாழ் நகர் அவமானச் சின்னமாக விளங்குகிறது.

இங்கு நடைபெற்றதாகக் கூறப்படும் மாபெரும் கூப்பன் மோசடி ஒன்று

—5-ம் பக்கம் பார்க்க

# ஒரு லொறியை ஓட்ட இருபது சாரதிகள்!

"உங்கள் அபிப்பிராயப்படி சிறந்து விளங்குகிறதென்று நீங்கள் கருதுகின்ற யாழ்ப்பாண கூட்டுறவுச் சங்கத்தைப் பற்றிப் பார்ப்போம். யாழ்ப்பாணக் கூட்டுறவுச்சங்கம் என்ன செய்கிறதென்பதைப் பற்றி நான் கூறவில்லை. கணக்குப் பரிசோதனைப் பகுதிக்கு தலைமைவகிக்கின்ற உதவி ஆணையாளர் திரு. மகேந்திரன் கூறியதை மட்டும் நீங்கள் கவனிக்க வேண்டும். அவர் யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சங்கத்தின் நிலையைப் பரிசீலனை செய்துவிட்டுத் தலைவருக்கு எழுதிய கடிதத்தை நான் இங்கு வாசித்துக் காட்ட விரும்புகிறேன்.

• யாழ் கூட்டுறவுச் சங்கத்திற்கு ஆகக் கூடியது 189 ஊழியர்கள் மட்டுமே நியமிக்கலாம் என்று வரையறுக்கப்பட்டிருந்தும் — அங்கு 1.11.73ல் 312 பேர் வேலைக்கமர்த்தப்பட்டிருந்தனர் என்றும், இலாபத்தில் 55 சதவீதமே சம்பளத்துக்காக ஒதுக்கப்படவேண்டும் என்ற நிலையிருக்க அங்கு 81 சதவீதம் சம்பளம் மற்றும் மேலதிக ஊதியம் போன்றவற்றுக்கு

—5-ம் பக்கம் பார்க்க

# தமிழரசு வெள்ளி விழா-கொழும்பில் முதல் கூட்டம்!

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் (25வது ஆண்டு நிறைவு) வெள்ளி விழா அடுத்த மாதம் 18ம் திகதி முதல் தமிழ் ஈழம் முழுவதும் கொண்டாடப்படவுள்ளது. இருபத்தைந்தாவது ஆண்டு நிறைவைக் குறிக்கு முகமாக இருபத்தைந்து வெள்ளி விழாக் கூட்டங்களை தமிழ் ஈழத்தின் பல்வேறு பகுதிகளிலும் நடத்துவதற்கு தமிழரசுக் கட்சி விரிவான ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

இந்தக் கொண்டாட்டங்களின் முதலாவது பொதுக் கூட்டம் தமிழரசுக்கட்சி தொடங்கப்பட்ட தினமான டிசம்பர் 18ம்திகதி கொழும்பிலும் இருபத்தைந்தாவது இறுதி விழா திருக்கோணமலையிலும் நடைபெறவுள்ளது.

திருக்கோணமலையில் நடைபெறவுள்ள வெள்ளி விழாவின் இறுதி நிகழ்ச்சி மிகப் பெரிய அளவில் [illegible] [illegible] அமையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கைத் தமிழரசுக் கட்சி 1949ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 18ம் நாள் கொழும்பிலுள்ள அரசாங்க லிகிதர் சேவைச் சங்கக் கட்டிடத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது தெரிந்ததே. இந்த ஆண்டு டிசம்பர் 18ந் திகதியுடன் கட்சி தொடங்கி கால் நூற்றாண்டு நிறைவு பெறுகிறது. கடந்த

—5-ம் பக்கம் பார்க்க

## விபுலானந்தர் பிறந்த ஊரின் வீதிக்கு சிங்கள பெயர்!

முத்தமிழ் வித்தகர் சுவாமி விபுலானந்த அடிகளார் அவரித்த தனித்தமிழ் ஊரான காரைதீவின் வீதியொன்றுக்குசிங்களப்பெயர் சூட்டப்பட்டுள்ள செயல், அப்பகுதியில் வாழும் தன்மானத் தமிழ் மக்களிடையே பெருங் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

பரசுராமன் என்பவர் ஆளுங்கட்சிக்கு காக்காய் பிடிப்பதற்காக (தனித்தமிழ் நாடாக இருந்து திட்டமிட்ட சிங்களக் குடியேற்றத்தினால் இன்று சிங்கள நாடாக மாற்றப்பட்டிருக்கும்) அம்பாறைத் தொகுதிக்கு பிரதிநிதித்துவம் வகிக்கும் சோமரத்தினவின் பெயரை காரை தீவுக் கிராமத்தின் வீதியொன்றுக்கு சூட்டியுள்ளதை எதிர்த்து அங்குள்ள தமிழ் இளைஞர்கள் கொதிப்படைந்துள்ளனர்.

இதற்கு எதிராகப் பலஇடங்களிலும் சுலோகங்கள் எழுதப்பட்டுள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை வாழ் தமிழ் பேசும் மக்களின் உரிமைக் குரல்




# 26. வள்ளுவருக்கு வந்த கவலை!

**கோவை-மகேசன்**

**நான்**காவது உலகத் தமிழ்மாநாடு நடைபெற்றுக் கொண்டிருந்த நாட்களில் ஒரு நாள்!

எங்குநோக்கிடினும் இசையும் கூத்தும், ஆடலும் பாடலும், பண்ணும் பரதமும், உலகத் தமிழ் பேரறிஞர்களின் கருத்து முழக்கங்களும், தமிழ் வாழ்க, வெல்க எனும் எழுச்சி முழக்கங்களும் நிறைந்து காணப்படுகின்றன!

கலை மலிந்த நாடு தமிழர் நாடு; கலைச் சுவை நிறைந்த உள்ளம் தமிழர் உள்ளம்; காட்டுமிராண்டிகளாக வேற்று நாட்டார் வாழ்ந்து கொண்டிருந்த நேரத்திலே கலை வாழ்வு வாழ்ந்திருந்தார் நம்முன்னோர்; மாற்றார் படையெடுத்து நாட்டைக் கைப்பற்றிட முனைந்திடும் போது மட்டும் கொலை வாளினைத் தூக்கிடும் தமிழனின் வன்மைக் கரங்கள்—ஏனைய நேரங்களில் எல்லாம் இசையின்பத்தில் — கலையின் பத்தில்—மூழ்கி கைத்தாளம் இட்டுக்கொண்டிருக்கும் மென்மைக்கரங்களாக மாறிவிடும் இயல்புள்ளவை; அத்தகைய பழம்பெரும் கலைப் பாரம்பரியம் ஈழத் தமிழனிடம் இன்றும் முழு அளவில் குடிகொண்டிருக்கிறது என்பதை உலகத் தமிழ் மாநாட்டின்போது எடுத்துக்காட்டிக் கொண்டிருந்தன — நாள் தோறும் நடைபெற்றுக் கொண்டிருந்த கலை விழா நிகழ்ச்சிகள்!

இதுபோன்றதோர் கலை விழாவை ஈழத் தமிழகம் இதற்கு முன்னரும் கண்டதில்லை; பின்னரும் காணப் போவதில்லையெனும் படி சீரிய முறையில் அதனை அமைத்திருந்தார் கட்டடக் கலைஞர் திரு. வி. எஸ். துரைராஜா அவர்கள்.

தமிழ் ஈழத்தின் கலைத் துறை ஆற்றலை—வெளிநாட்டுப் பேராளர்கள் கண்டு மெய்சிலிர்த்து விதந்து போற்றும் வகையில் சிறப்புற அமைத்து தமிழ் மக்களின் பெருமையை உயர்த்தி அனைவரது பாராட்டுதல்களையும் பெற்றுக் கொண்டார் அவர்.

இந்தக் கலை விழாக்களில் பங்குகொண்டு, தமிழ்க்கலைகளின் சிறப்பை வெளிநாட்டார் கண்களுக்கு விருந்தாக படைத்திட ஆர்வமுடன் போட்டிபோட்டுக்கொண்டு முன் வந்து ஒத்துழைப்பு நல்கிய ஈழத் தமிழ் கலைஞர்கள் அனைவருமே தமிழ் ஈழத்தின் பெருமையை உயர்த்தி விட்டனர்! என்றாலும் இன்னும் எத்தனையோ கலைஞர்களுக்கு விழாவில் பங்கு கொண்டு தங்கள் ஆற்றலைக் காட்டிடசந்தர்ப்பம்கிடைக்காமலும் போயிருக்கக் கூடும்!

நாட்டியாஞ்சலி, உழவர் காவடி நடனம், பரத நாட்டியம், நாட்டிய நாடகங்கள், தாளி தரங்கம், குச்சுப்புடி, பாம்பு நடனம், கரகம், வில்லுப்பாட்டு, பண்ணிசை, வீணை, மிருதங்கம், நாடகங்கள், நாதஸ்வர இசை—என்று இன்னோரன்ன பல்வேறு கலை நிகழ்ச்சிகள் நாள்தோறும் மாலை வேளைகளில் வீரசிங்க மண்டபம், திறந்த வெளியரங்கு, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆகிய இடங்களில் நடைபெற்றுக்கொண்டிருந்தன.

ஆனால் ஒரே ஒரு பெருங் குறை—ஆனால் அது தவிர்க்கவும் முடியாததுதான்!

சம காலத்தில், மூன்று இடங்களில் கலைநிகழ்ச்சிகளை நடத்தியதன் காரணமாக— ஒருவர் கலை விழாவில் முழு அம்சங்களையும் பார்த்திடவும் சுவைத்திடவும் முடியாத நிலையை அமைப்பாளர்கள் ஏற்படுத்திவிட்டனர்! வாழைப்பழம், மாம்பழம், பலாப்பழம் ஆகிய முக்கனிகளையும் வெவ்வேறு இடங்களில் ஒரே நேரத்தில் பகிர்ந்தளித்தால், எதை வாங்குவது—எதைத் தவிர்ப்பது — என்று திக்குமுக்காடிட வேண்டிய நிலையில்—மக்கள் தவித்தனர். ஆக — எல்லா கலைநிகழ்ச்சிகளையும் ஒரு சேரக் கண்டவர் எவருமிலர்.

இந்தக் கலைவிழாக்களின் போது நடந்த மறக்க முடியாத நிகழ்ச்சி, இலண்டன் பல்கலைக்கழக பேராசிரியர் டாக்டர்மார் நடத்திய கர்நாடக இசைக் கச்சேரியாகும். அரையில் வேட்டி அணிந்து நெற்றியில் சந்தன பொட்டணிந்து — மேடையில் அமர்ந்திருந்து அந்த வெள்ளைக்கார பாகவதர் பொழிந்த தமிழிசை தமிழ் நெஞ்சங்களை உருகவைத்தது. தமிழர் தந்தை செல்வநாயகம் அவர்கள், டாக்டர் மார் அவர்களின் கர்நாடக இசை கேட்டு, தன் உள்ளம் பறிகொடுத்துஅவரை வெகுவாகப் பாராட்டி மகிழ்ந்தார்.

இவ்வளவுதூரம் கலகலப்பும், மகிழ்ச்சிப் பெருக்கும் நிறைந்து காணப்பட்ட யாழ் மாநகரத்தின் ஓரிடத்தில் கவலையடைந்த முகத்தினராக ஒருவர் காணப்பட்டார்!

ஒளிபொருந்திய அவரது கண்களில் வாட்டம் இழையோடியது. நீண்ட தாடியை உருவிவிட்டுக்கொண்டே ஆழ்ந்த சிந்தனையுடன் காணப்பட்டார் அந்த முழு மனிதர்!

ஓ... யார் அவர்? வள்ளுவப் பெருந்தகை போல் அல்லவா இருக்கிறது?

ஆம்—சந்தேகமில்லை! அவர் வள்ளுவப் பெருந்தகையே தான்!

சற்றுக் கிட்டேசென்று அவரது கவலையென்ன என்பதை அறிந்திடுவோமா?

“வள்ளுவப் பெருந்தகையே! வணக்கம்! ஊரெங்கும் தமிழ்விழாவால் அமர்க்களப்படுகிறது. நீங்களோ இப்படி மூலையில் வந்து அமர்ந்து கொண்டுவிட்டீர்களே! உங்கள் முகம் சற்று வாட்டமடைந்து காணப்படுகிறதே! ஏன் ' ஐயா உங்களுக்கு இந்த விரக்தி? விழாவில் ஏதாவது தவறு கண்டீர்களா?என்று மளமளவென்று பொரிந்து தள்ளினேன்!

வள்ளுவர் என்னைப் பார்த்து அமைதியாகச் சிரித்தார். “தவறு? இவ் [illegible] பெருமையை — குறளின் சிறப்பை எடுத்துக்காட்டும் வகையில் நீங்கள் நடத்துகின்ற விழாவிலும் தவறு ஏற்படுமா? இதுபோன்ற விழாவினை நான் வாழ்ந்திருந்த காலத்தில் தமிழகத்தில்கூட கண்டதில்லை!” என்றார் வள்ளுவர்!

“அப்போது ஏன் உங்கள் முகம் வாடியிருக்கிறது? கலை விழா — கண்காட்சி எதற்குமே போகாமல் இப்படி முகத்தில் கவலை ரேகைகள் படர, இங்கே வந்து உட்கார்ந்திருக்கிறீர்கள்?” என்கிறேன் நான்!

“அதுவா தம்பி, மாநாட்டின்போது நாள்தோறும் தமிழர்கள் போட்டார்களே விருந்து! அதுதான் என் கவலைக்குக் காரணம்!”

என் நெஞ்சம் பதறியது. கண்களில் நீர் நிரம்பியது; எங்கள் ஈழத் தமிழகத்தார் மாநாட்டுக்கு வந்திருந்த வெளிநாட்டுப் பேராளர்களுக்கு அளித்த விருந்துபசாரத்தின்போது ஏதாவது பெரிய குற்றம்குறை இருக்குமோ? தவறுகள் நேர்ந்திருக்குமோ? விருந்தினர் உள்ளம் புண்படும்படியாக ஏதாவது நிகழ்ந்திருக்குமோ? அதனால் தான் வள்ளுவர் முகம் வாட்ட முற்றிருக்கிறதோ? இத்தகைய கேள்விகள் என் நெஞ்சில் நிழலாட, நான் கூறினேன்.—

‘ஐயா வள்ளுவரே, எங்களை மன்னித்துக்கொள்வீராக, எங்கள் நாட்டில் பசியும் வறுமையும் துன்பமும் இப்போது அதிகரித்துள்ளது உண்மைதான். படி அரிசி ரூபா பன்னிரண்டு விற்பதும் உண்மைதான் ஆனால் என்னதான் வறுமையும் கஷ்டமும் எங்களை வாட்டிவதைத்தாலும் எங்கள் தமிழினத்தின் விருந்தோம்பும் பண்பாடு இருக்கிறதே அதை நாங்கள் கைவிடவே மாட்டோம்! நீங்கள் விருந்தோம்பலுக்கு வகுத்துத்தந்து சென்றுள்ள பத்துக்கட்டளைகளையும் நாம் என்றும்மறந்ததுமில்லை மறக்கவும் மாட்டோம். அதன்படியே விருந்தினரை எம்மால் முடிந்தளவு உபசரித்துள்ளோம்! அதில் ஏதாவது தவறு இருந்தால் பொறுத்தருள்வீராக” என்று வேண்டிநின்றேன்!

வள்ளுவர் கடகடவென்று சிரித்தார்.

‘உங்கள் விருந்தோம்பலில் குறையா? இப்படிப்பட்ட விருந்துபசாரத்தை நான் எங்கும் இதற்குமுன் கண்டதேயில்லையே! அகமும் முகமும் மலர நாள்தோறும் உங்கள் மக்கள் அளித்தவிருந்து உபசாரத்துக்கு ஈடேது இணையேது! ‘செவிக்குணவில்லாத போதுதான் சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்’ என்றேன் நான்! ஆனால் நீங்களோ சதா எந்நேரமும் செவிக்கு உணவையும் வயிற்றுக்கு உணவையும் சம அளவில் தந்து திணறடித்து விட்டீர்கள்! மலர்ந்தமுகத்துடன் போட்டிபோட்டுக்கொண்டு உங்கள் மக்கள் தந்த விருந்துக்கு இணையானவிருந்தை இதற்கு முன் நான் கண்டதேயில்லை! என்று கூறினார் வள்ளுவர்!

இப்படி வள்ளுவர் கூறியும் எனக்குச் சந்தேகம்தீர்ந்த பாடில்லை. என்னைத் திருப்திபடுத்துவதற்காகத்தான் ஒருவேளை இவ்வாறு கூறுகிறாரோ? அல்லாவிட்டால் தனது கவலைக்கு காரணம் விருந்துபசாரம்தான் என்று அவர் ஏன் கூறியிருக்கவேண்டும்?

“அப்போ...உங்கள் கவலைக்குக் காரணம் விருந்துதான் என்றீர்களே...” என்று இழுத்தேன்!

“ஓ...அதுவா? எனக்குள்ள கவலை என்ன தெரியுமா? திருக்குறளில் விருந்தோம்பலுக்கென 10 குறள்கள் எழுதியிருக்கிறேன் அல்லவா? அதை அப்போது எழுதியிராமல் — யாழ்ப்பாண தமிழ் மக்கள்போட்ட விருந்தைச் சுவைத்த பின்னர்— இப்போது அதை எழுதியிருந்தால், இன்னும் சிறப்பாக எழுதியிருந்திருப்பேன்! அதை எண்ணிய போதுதான் எனக்கு கவலை ஏற்படுகிறது!’ என்றார் வள்ளுவர்!

அப்பாடா, என் நெஞ்சப் படபடப்பு அடங்கியது. இதயம் புளகாங்கிதமடைந்தது!

ஆமாம்— வள்ளுவர் என் கற்பனையில் தோன்றி ஈழத் தமிழ்மக்களின் விருந்தோம்பும் பண்பாட்டை மேற்கண்டவாறு புகழ்ந்தாலும் —மாநாட்டுக்கு வந்திருந்த வெளிநாட்டு பேராளர்கள் அனைவருமே தமிழ் மக்கள் கொட்டிய அன்பு விருந்தில் மூழ்கித்திளைத்து வாய்விட்டுப் பாராட்டினர்.

வெளிநாட்டுப்பேராளர்களுக்கு விருந்து அளிப்பதற்கு ஏராளமானோர் போட்டி போட்டுக்கொண்டு முன்வந்தும் — பலருக்கு ஏமாற்றமே காத்திருந்தது- காரணம் விருந்துக்கு ஒதுக்குவதற்கு போதிய நேரம் கிடையாமைதான்!

கிராமங்களிலிருந்து தமிழ் மக்கள்— வெளிநாட்டு அறிஞர்கள் தங்கியிருக்கும் இடங்களுக்கு தங்கள் அன்பின் பிரதிபலிப்பாக யாழ்ப்பாணத்தில் பிரசித்திபெற்ற கூழ்; பனங்காய் பணியாரம், கருப்பனீர் போன்ற பொருட்களை தாங்களாகவே கொண்டு வந்து கொடுத்து தங்கள் விருந்தோம்பும் பண்பை எடுத்துக்காட்டினர். விருந்துகளின் போது, யாழ்ப்பாணத்து பலகாரங்கள், சிற்றுண்டி வகைகளே பெரும்பாலும் பரிமாறப்பட்டன.

தமிழ் மக்களின் விருந்தோம்பலினால் கவரப்பட்ட சுவீடன் நாட்டறிஞர் பிறைகோம்—அரசாங்க எழுவினைஞர் சங்கம் அளித்தவிருந்துபசாரத்துக்கு நன்றிதெரிவித்து தமிழிலே பேசும் போது—“ஒரு நாள் உணவை ஒழியென்றால் ஒழியாய்” என்ற ஔவையின் பாடலை எடுத்துக்காட்டி — யாழ் மக்களின் விருந்தோம்பும் பண்பாட்டை விதந்து பாராட்டியது இன்றும் என் நெஞ்சில் ரீங்காரமிடுகிறது.

உணவு, உறையுள் ஆகியவற்றுக்குப் பொறுப்பாளராகப் பணியாற்றிய அன்பர் சச்சிதானந்தன் அவர்கள், விருந்துபசாரங்களுக்கு வேண்டிய சகல பொறுப்புக்களையும் சுறுசுறுப்புடன் கவனித்து—கண்காணித்து— பணியாற்றிய பாங்கு இருக்கிறதே அது நிச்சயம்பாராட்டப் படவேண்டியது!

சாதாரணமாக நம் வீடுகளில் நடைபெறும் திருமணத்தின் போதே — திருமணத்துக்கு வந்த யாராவது உணவு விஷயத்தில் தற்செயலாகக் கவனிக்கப்படாமல், தவறுதலாக விடப்பட்டு விட்டால், அதுபெரிய ரகளையாகிறது. அப்படியிருக்கும் போது — உலகத் தமிழ் மாநாடு போன்ற பெரிய அளவில் நடைபெறும் மாநாடுகளின் போது இப்படிப்பட்ட குறைகள் ஏற்படாமல் அதை நடத்தி முடிப்பது என்றால் அது சாதாரணமானதல்ல. அப்

—7-ம் பக்கம் பார்க்க.

## சனியன்!

சனியன் பிடித்தவனே தமிழா நீ செத்து மடி!
இனியேன் இருக்கின்றாய் எலும்பைச் சுவைத்திடவா?
குனிவாய்—பொறுக்கிடுவாய் கொள்கை விடுத்தவனே
மனித வகைகளிலே மடையா நீ எந்த வகை?

மானம் இலாதவனே மரியாதை அற்றவனே
ஊனம் எதுவென்றே உணர மறுப்பவனே
ஈனப்பிறவி தனில் இருந்து தொலைப்பவனே
தானம் கொடு எல்லாம் சலுகைகளே போதுமடா!

வேகுதடா நெஞ்சமெலாம் விலங்குத் தமிழா நீ
சாகிறது நல்லதடா சண்டாளப் பாதகனே!
நோகும் தமிழ் கண்டும் நோகாதிருக்கும் நீ
போகும் நாள் என்றோ புனிதம் புவிக்கன்றோ!

காட்டிக்கொடுக்கின்ற கயமைத்தமிழா நீ
கூட்டிக்கொடு ஏதும் கூலி கிடைக்குமடா!
நாட்டை மொழியை விடு நாய்போல் நடமாடு!
கேட்டை நினைக்காதே கிடைப்பதனைப்பெற்றுக்கொள்!

விடுதலையா ஒரு இருத்தல் விலையாதெனக் கேட்டும்
படுபாவி சாவுக்குப் பயமோடா? சாவின்றி
நெடுநாளிருப்பாயோ நிலையோ புவிவாழ்வு?
கெடுவாய் கெடுக்கின்றாய் கேளோடழிந்திடடா!

உன் நலத்தைப் பார்க்கின்றாய் உந்தனது சந்ததியின்
பின் நலத்தைப் பார்த்தாயா பேயா—பெரும்பேயா!
தன்மானமின்றித் தவித்துவங்கள் ஏதுமின்றிப்
புன்நாயாய் வாழ்வதிலும் போவது நீ நல்லதடா!

பாரதியை, அண்ணாவைப் பாராதே—பேசாதே!
வீரமுடையோரை விட்டுவிடு நீ கோழை!
கூரறிவு கொண்ட அவர் கொள்கைக்கும்,
பொம்மையென
ஒருணர்வுமில்லாத உனக்கும் தொடர்பேது?

சூடு சுணையற்ற சோற்றுத் தமிழா நீ
பாடுகிறாய் சங்கமமாம் பல்லவியை! நாள்தோறும்
ஆடுகிறாய் சும்மா அளக்கின்றாய் விட்டுவிடு!
ஓடு சுடலைக்கு! உலகைக் கெடுக்காதே!

—தாமரைத் தீவான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்யூனிஸ்டுகளின் கபட நாடகம்!

# வடக்கே பிரதேச சுயாட்சிப் பேச்சு! தெற்கே சுயாட்சிக்கு கொள்ளிவைப்பு!

இலங்கையின் மீது அந்நியர்கள் அடி எடுத்து வைக்கு முன்னர் தமிழர்களும் சிங்களவர்களும் தனித்தனியே அரசுகள் அமைத்து வாழ்ந்து வந்தனர். அந்நியர்கள் தங்கள் நிருவாகவசதிக்காக—சுரண்டும் வசதிக்காக இந்த அரசுகளின் எல்லைக் கோடுகளை அழித்து ஆட்சிசெய்தனர். இது வரலாற்று உண்மை. இதனால் தமிழ் மக்கள் தமது இராச்சியத்தைச் சிங்கள மக்களிடம் பறிகொடுத்துவிட்டனர். தாம் இழந்த இராச்சியத்தை மீண்டும் பெறப் போராடிக் கொண்டிருக்கிறார்கள் இன்று ஈழத் தமிழர்கள். இந்தப்போராட்டத்தின் நியாயத்தைப்பற்றி நாம் ஆராயவேண்டும்.

உலகத்திலே பல நாடுகள் இன்று இருக்கின்றன. பல புதிதாகத் தோன்றியுள்ளன. நாடுகள் என்று கூறும் பொழுது அவற்றின் வரைவு இலக்கணத்தை நாம் சிந்திக்கவேண்டும். 'நாடு' என்றால் என்ன? அவை எந்த

# வானாப் போனாவுக்கு ஒரு சவால்!

அடிப்படையில் உருவாகுகின்றன? அவை எந்த அடிப்படையில் அங்கீகரிக்கப்படுகின்றன? இந்தக்கேள்விகளுக்குரிய பதில்கள்தான் இன்று இலங்கையில் குளறுபடியில் இருக்கின்றன. இதன் காரணமாகத்தான் ஈழத் தமிழர்களின் 'தன்னாட்சி'க் கோரிக்கையின் நியாயம் புரியாமல் இருக்கிறது.

உலகத்திலே இயங்குகின்ற நாடுகள் எந்த அடிப்படையில் நாடுகளாக இயங்கவேண்டும் என்பதற்கு ஐ.நா. சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதி இருக்கவேண்டும். அந்த விதி இல்லாத காரணத்தால்தான் இன்று 'சைப்பிரஸ்', 'தமிழ் ஈழம்' போன்ற பிரச்சினைகளும்—உருவாகிவிட்ட பங்களாதேஷ் போன்றவையும் ஏற்படக்காரணம் ஆகும்.

உலகம் முழுவதையும் இணைத்து ஒரு பாராளுமன்றம் இருக்கவேண்டும் என்ற கருத்தை முதலில் எடுத்துக் கொள்வோம். உலகத்தில் வாழும் இனங்கள் அவ்வப் பிரதேசங்களில் சுயாட்சியுடன் கூடிய அரசுகளைப் பெற்று இணைந்து ஒரே பாராளுமன்றத்தின் கீழ் இயங்கலாம். இது உலகம் முழுவதையும் சமஷ்டி (இணைப்பாட்சி) ஆட்சிமுறையால் இணைத்து வைப்பதாகும். இது எந்த அளவிற்குச் சாத்தியம் ஆகும் என்பது சிந்தனைக்குரியது. இது சாத்தியமாகாத பட்சத்தில் தான் தனித்தனி இராச்சியங்கள் தோன்றியுள்ளன. இந்தத் தனித்தனி நாடுகளின் எல்லை என்ன? அவற்றின் அமைப்புக்களின் காரணிகள் யாவை? அவற்றின் அமைப்புக்களை இன்று ஆயுதம்தான் காத்து வருகிறது என்று கூறினால் அது மிகையாகுமா? உலகத்திலே இன்று நாடுகளின் அமைப்பை நியாயமற்ற முறையில் காத்துவருகிறார்கள்.

உலகத்திலே தனித்தனி நாடுகள் இருக்கவேண்டும் என்றால்—அதாவது உலகமுழுவதும் ஒரே பாராளுமன்ற அமைப்பு இல்லாது இருக்கவேண்டுமென்றால்—இனங்களின் அடிப்படையிலேயே நாடுகள் உருவாக வேண்டும். அல்லது அந்தந்த நாடுகளில் இவைகளுக்குச் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட வேண்டும். இக்கொள்கை இன்று நேற்றுக் கூறப்பட்டதுவல்ல.

இன்று ஈழத்திலே வாழும் தமிழ் பேசும் மக்களின் சுயநிர்ணய உரிமை மறுக்கப் பட்டுவிட்டது. 'இலங்கை' ஒரே நாடாகக் கருதப்பட வேண்டுமெனில் சிங்கள மக்களுக்கும் தமிழ் மக்களுக்கும் தம்மைத் தாமே ஆளக் கூடிய—சுயநிர்ணய உரிமை இரு இனத்தவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட அரசியல் அமைப்பு இருக்கவேண்டும். ஆனால் இன்று உள்ள அரசியல் அமைப்பு — தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுத்து அவர்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் உரிமை சிங்கள மக்களின் கைகளில் கொடுத்துவிட்டது. இது அநீதியான செயல் என்பதைத் தமிழர் கூட்டணி வற்புறுத்திக் கூறுகிறது. தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட 'தன்னாட்சி' உருவாகவேண்டும் என்று தமிழர் கூட்டணி வற்புறுத்துகிறது.

சுயநிர்ணய உரிமையைப் பற்றி 1913 இல் 'மார்க்ஸியமும் தேசியப் பிரச்சினையும்' என்ற கட்டுரையில் ஸ்டாலின் அவர்கள் கூறிய கருத்து இங்கே கவனிக்கற்பாலது, அவர் கூறுகிறார் — சுயநிர்ணய உரிமை என்றால் அர்த்தம் என்ன? ஒரு இனம் தனது வழியைத் தானே தெரிவுசெய்யும் உரிமையே அது ஒரு இனத்தின் வாழ்வில் குறுக்கிடுவதற்கும் அந்த இனத்தின் பாடசாலைகளை, மற்றும் பள்ளிக்கூடங்களையும் அழிப்பதற்கும் மற்றும் கல்விக் கூடங்களையும் அழிப்பதற்கும் அந்த இனத்தின் பண்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் அழிப்பதற்கும், அந்த இனத்தின் மொழியை நசுக்கவும் அம்மொழியின் உரிமைகளைக் கட்டுப்படுத்தவும் வேறுயாருக்கும் அதிகாரம் கிடையாது.

ஸ்டாலின் அவர்களின் கருத்து இலங்கை அரசின் இடதுசாரிகளுக்குச் சவுக்கடியாகும். அவரின் கருத்துப்படி இலங்கை அரசு மக்களின் சுயநிர்ணய உரிமையை முற்றாக மறுத்து விட்டது. அதற்குப் பல உதாரணங்கள் கூறலாம். ஒரே ஒரு சிறிய உதாரணம் —உலகத்தமிழ் மாநாட்டை எங்கே நடத்தவேண்டும் என்று நிர்ணயிக்கவேண்டியவர்கள் தமிழர்கள். அப்படி இருக்க அதைக்கொழும்பில் நடத்தவேண்டும் எனப் பிடிவாதமாக நின்றது இலங்கையரசு.

சுயநிர்ணய உரிமையின் முக்கியத்துவத்தைப் பலர் உணர்ந்து உள்ளனர். இதனால்தான் இலங்கைத் தமிழரசுக் கட்சி தமிழ், மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பாதுகாக்கப் போராடுகிறது. மாமேதை லெனின் இனங்களின் சுய உரிமை என்ற கட்டுரையில் சுயநிர்ணய உரிமையை மறுப்பவர்களுக்குச் சாட்டை கொடுக்கிறார்.

“இனங்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்று, இனமொழி சமத்துவத்திற்காக வாதாட முன்வராத ஒருவரும் அத்துடன் இன ஒதுக்கலையோ சமத்துவம் இன்மையையோ எதிர்த்து வாதாடாத ஒருவரும் மார்க்ஸிய வாதியாகவோ அல்லது ஜனநாயக வாதியாகவோ இருக்க முடியாது.”

“இவ்வாறு [illegible] லெனின் கூறினார் அன்பதைவிட இலங்கையின் இடதுசாரிகளுக்கும் இடித்துரைத்தார் என்பது பொருந்தும்.

லெனின் கூற்றுப்படி இலங்கைக் கம்யூனிஸ்டுக்கள்—தாம் மார்க்சிய வாதிகளாக இருக்கவேண்டும் எனக்கருதிப்போலும்—குறிப்பாக ரஷ்ய சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிராந்தியக் கிளை அடிக்கடி 'பிரதேச சுயாட்சி' பற்றிப்பேசுகிறது. அவர்கள் பேசும் 'பிரதேச சுயாட்சி' எத்தகையது? தமிழர்களும் சிங்களவர்களும் தாம் தாம் வாழும் பிரதேசங்களில் சுயாட்சி பெறும் அமைப்பைத்தான் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிராந்தியக்கிளை தீர்மானித்தால் அக்கிளையின் உறுப்பினர்கள் லெனின் கூற்றுப்படி மார்க்சியவாதிகளாக பேச்சளவிலாவது இருக்கமுடியும்.

கம்யூனிஸ்ட்கட்சியின் வடபிராந்தியக் கிளையின் 'பிரதேசசுயாட்சி' பற்றிய தீர்மானம் மிகவும் கவலைக்குரியதும் கேலிக்குரியதும் ஆகும். தமிழ் பகுதியில் கம்யூனிஸ்ட்கட்சியின் இழந்துபோன செல்வாக்கை நிலைநிறுத்த வடபிரதேசக்கிளை மிகவும் முயலுகிறது என்பதையே அத் தீர்மானம் காட்டுகிறதேயொழியவேறு எதையும் காட்டவில்லை. தமிழ் பிரதேசத்திற்குப் பிரதேசசுயாட்சி அளிப்பது தமது கொள்கையென்று யாழ்ப்பாணத்தில் சுவரொட்டிகளையொட்டும் தோழர்கள் தென் இலங்கையில் மௌனம் சாதிக்கின்றனர்.

இப் பிரதேச சுயாட்சியை அமைச்சர் கெனமனோ, விக்கிரமசிங்காவோ தென் இலங்கையில் எடுத்துச்சொல்வார்களா? இக்கொள்கையை ஏற்றுக்கொள்ளும்படி எப்பொழுதாவது அரசைக் கேட்டதுண்டா? வடக்கே ஒரு கொள்கையும் தெற்கே சிங்கள இனவெறிக்குத் தூபம் போடும் கொள்கையையும் கடைப்பிடித்ததால் தான் கம்யூனிஸ்ட்கட்சியின் மேல் தமிழ்மக்கள் நம்பிக்கை இழந்தனர். (1966ம் ஆண்டு ஜனவரி 8ல் தமிழ் மொழி விசேட மசோதாவை எதிர்த்து கம்யூனிஸ்ட்கட்சியும் வகுப்புவாத ஊர்வலம் நடத்தியது.)

தமிழரசுக்கட்சியின் சமஷ்டிக் கோரிக்கையைக் கேலி செய்து, சமஷ்டிபற்றி சரியான விளக்கம் அக் கட்சியால் தரப்படவில்லை என்று குறையும் கூறினர் வட பகுதிக் கம்யூனிஸ்ட்கட்சிக் கிளையினர். ஆனால் தமிழரசுக் கட்சி தனது சமஷ்டிக் கோரிக்கையின் அமைப்பை அரசியல் நிர்ணய சபையில் சமர்ப்பித்துத் தமது கொள்கையைத் தெளிவாக்கியதுடன் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட முயன்றது. பிரதேச சுயாட்சி பற்றி பறைசாற்றும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி வட பிரதேசக் கிளையினர் பிரதேச சுயாட்சி பற்றிய எந்தவிதமான அமைப்பையும் வெளியிடவில்லை. மத்திய கமிட்டியானது பிரதேச சுயாட்சியை ஏற்றுக்கொண்டதற்கு எந்தவித அத்தாட்சியும் இல்லை. ஆனால் இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி பிரதேச சுயாட்சியை எதிர்கிறது. என்பதற்குப் போதிய ஆதாரம் உண்டு.

1. தமிழ் பிரதேசங்களுக்குச் சுயாட்சி வழங்கும் திட்டமான சமஷ்டித் திட்டத்தைத் தமிழரசுக்கட்சி அரசியல் நிர்ணய சபையில் முன்வைத்தபோது அத்திட்டத்தை எடுத்தெறிந்து பேசி எதிராக வாக்களித்தனர்—

2. மாவட்ட சபைகள் மசோதா யு.என்.பி. காலத்தில் கொண்டுவர ஆலோசித்தபோதும் அதை (கம்யூனிஸ்டுகளும் அங்கம் வகிக்கும், ஐ.மு. கட்சியினர் பலமாக எதிர்த்தனர்.

எல்லாவற்றிற்கும்மேலாக ஒரு அநியாயத்தைச் செய்துள்ளார்கள் இலங்கைக் கம்யூனிஸ்ட் (ரஷ்ய சார்பு)

**அளவை - குமாரன்**

காரர்கள். கட்சியின் வட பிரதேசக் கிளை அப்பிரதேச மக்களைத் திருப்திப்படுத்தப் பிரதேச சுயாட்சி என்று முனைகும்போது அதன் பா.உ.க்கள் அரசியல் நிர்ணய சபையில் அதற்கு முற்றும் மாறாக நடந்துள்ளார்கள்.

இலங்கையின் எதிர்காலத்தில் — அதாவது இலங்கை குடியரசு ஆக்கப்பட்டபின்

—5-ம் பக்கம் பார்க்க

# ஒரு கூண்டுக் குயில் கூவுகிறது!

நான் பாடும் பாட்டை
நாடு முழுதும் அறியும்
நான் படும் பாட்டை
நானன்றி யாரறிவார்!

பொன்வானில் நீந்தியவன்
பூஞ்சிறகை வெட்டினார்!
வன்னெஞ்சர் ஏனோ என்
வாழ்வை முடம் செய்தார்?
சின்ன இருட் கூண்டில்
சிறை வைத்தார் சண்டாளர்!
இன்னல் நடுவில் யான்
இருந்தேன்—இசைக்கின்றேன்.

நான்பாடும் பாட்டை
நாடு முழுதும் அறியும்
நான்படும் பாட்டை
நானன்றி யாரறிவார்?

இனியதாம் விடுதலை
என்றன் பிறப் புரிமை
குனியாத என் போக்கு
கூடப் பிறந்த குணம்
தனியான என்பாடல்
தடியர்க்குப் பிடிக்கவில்லை
கனிவிலார் சிறைவைத்தார்
கைதி நான் பாடுகிறேன்!

நான் பாடும் பாட்டை
நாடு முழுதும் அறியும்
நான் படும் பாட்டை
நானன்றி யாரறிவார்?

மத்தளம் போல் மேடையிலே
மானுடத்தின் பெருமைகள்
சத்தமிட்டு முழக்குவார்!
தாமே பிறரைத்தம்
கொத்தடிமையாய்க் கொள்வார்!
கொடியர் எனை விடுவாரா?
எத்தர் தம் சிறைக்கூண்டில்
எனை மறந்து கூவுகிறேன்!

நான் பாடும் பாட்டை
நாடு முழுதும் அறியும்
நான் படும் பாட்டை
நானன்றி யாரறிவார்!

கூண்டினுள்ளே தீயர்
கொடுக்கும் அடிமைத்தீன்
தின்ட மனம் மறுக்கிறதே!
தீன் என்னைத் தின்கிறதே!
நீண்டவெளி வானத்தை
நினைந்துமனம் தவிக்கிறதே!
தாண்ட முடியாச் சிறையில்
தனித்திருந்து கத்துகிறேன்!

நான் பாடும் பாட்டை
நாடு முழுதும் அறியும்!
நான் படும் பாட்டை
நானன்றி யாரறிவார்?

— காசி ஆனந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# ஆத்திரமூட்டும் அவமதிப்பு!

இந்நாட்டுத் தமிழ் மக்களை இன்றைய சிங்கள ஐக்கிய முன்னணி அரசு எவ்வளவு தூரம் அவமதித்து — அவர்களது அடிப்படை ஜனநாயக உரிமைகளைக்கூட கேலிப் பொருளாக்கி வருகிறது என்பதற்கு காங்கேசன் துறை இடைத்தேர்தல் விஷயத்தில் அது பின்பற்றிவருகின்ற ஆத்திரமூட்டும் அலட்சியமனப்பான்மை தக்க சான்ருக விளங்குகிறது.

காங்கேசன்துறை இடைத்தேர்தலை கடந்த இரண்டு ஆண்டுகளாக நடத்த முன்வராமல்—அந்தப்பகுதி தமிழ் மக்களை அவமதித்துவரும் அரசின் தலைவியார் திருமதி ஸ்றிமாவோ பண்டாரநாயகா அவர்கள் — சென்ற (அக்டோபர்) திங்கள் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது, விரைவில் தாம் காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்தப்போவதாக திருவாய் மலர்ந்தருளியிருந்தார்!

அம்மையாரின் அகராதியில் 'விரைவில்' என்ற பதத்திற்கு ''மேலும் இரண்டு ஆண்டுகள் கழித்து'' என்பதுதான் அர்த்தமோ தெரியவில்லை!

ஏனெனில் அம்மையார் யாழ்ப்பாணத்திலிருந்து திரும்பியதும்—உடனடியாக கலாவேவ இடைத்தேர்தலுக்கு நாள் குறிக்கப்பட்டு, இத்திங்கள் 27-ம் திகதி தேர்தலும் நடக்கப்போகிறது. கட்டான இடைத்தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் தாக்கல் செய்யும் திகதியும் இந்த வாரம் அறிவிக்கப்பட்டுவிட்டது!

சிங்கள நாட்டிலுள்ள கலாவேவ, கட்டான ஆகிய தொகுதி மக்களின் ஜனநாயக உரிமைகளை மதித்து, அவர்கள் தங்களின் பிரதிநிதிகளை தெரிவுசெய்ய தாமதமின்றி வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்திருக்கும் அரசு, தமிழ் ஈழத்திலுள்ள காங்கேசன்துறை தொகுதி மக்களின் உரிமையை மட்டும் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக ஆழக் குழிதோண்டிப் புதைத்து வருகிறதென்ருல் — அதற்கு காரணம் என்ன?

தமிழினம் இந்நாட்டில் அடிமை இனம்—ஆளப்படும் இனம்—என்பதுதான் ஒரே காரணமாகும்! தமிழ் ஈழம் சிங்கள ஏகாதிபத்தியத்திற்கு அடிமைப்பட்டுக் கிடக்கிறது என்பதுதான் இதன் பொருளாகும்!

எனவே காங்கேசன்துறை இடைத்தேர்தலை நடத்தும்படி நீதி நியாமற்ற இந்த அரசிடம் கோரிக்கை விட்டுக்கொண்டிருப்பதை விட—தமிழினம் சுயாட்சி பெற்றிட—தமிழ் ஈழம் விடுதலை பெற்றிட—தமிழ் சமுதாயம் தீவிரமாகப் போராடுவதே சாலச் சிறந்ததாகும் என்று இன்றைக்கு தமிழ் இளைஞர்கள் சிந்திக்க ஆரம்பித்திருக்கிருர்கள்.

தமிழ்ஈழம் தன்னுட்சி பெற்று—தமிழினம் சுதந்திரம் பெற்ருல் மட்டுமே தமிழ் மக்கள் தங்கள் பகுதிகளின் தேர்தல்களை தாமே நடத்தி—தங்கள் சனநாயக உரிமைகளை அனுபவிக்க முடியும் என்கிற இறுதி முடிவுடன் தீவிர விடுதலைப் போராட்டத்தில் குதிக்கும்படி தமிழ் இளைஞர்களைத் தூண்டி விட்டுக்கொண்டிருக்கிறது—காங்கேசன்துறை இடைத்தேர்தல் விஷயத்தில் அரசு பின்பற்றிவரும் நீதியற்ற இனப்பாரபட்ச மனப்பான்மை!

ஆம்—காங்கேசன்துறை இடைத்தேர்தலில், தமிழ் மக்களின் அடிப்படை சனநாயக உரிமையை அரசு வழங்க மறுத்துவரும் இனப்பாரபட்சம் நிறைந்த அநீதியான செயலானது — தமிழ் இனத்தின் சுயநிர்ணய சுயாட்சிக் கோரிக்கைக்கே மேலும் வலுவூட்டி வருகிறது!

---

# பனை இயக்கம்!

ஒவ்வொரு தீமையிலும் ஒவ்வொரு நன்மையும் இருக்கும் என்று கூறுவார்கள். ஆட்சியாளரின் வங்குரோத்து கொள்கையால் நாட்டில் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடி—பனையின் முக்கியத்துவத்தையும், அதன் பிரயோசனங்களையும் தமிழ் மக்கள் உணரக்கூடிய ஒரு நிலையை ஏற்படுத்தி விட்டது கண்டு மகிழ்ச்சியடைகிருேம்!

நீர்வளம், நிலவளம், கடல்வளம், காட்டுவளம், மூலப் பொருள்வளம், போன்ற பல்வேறு வளங்களுடன் பனை வளமும் நிறைந்த நாடு நம் தமிழ்ஈழம்! கற்பகதரு, காமதேனு, என்றெல்லாம் புகழப்படும் பனைமரத்தின் பயன்களை உணராது புறக்கணித்துவந்தவர்கள் அனைவரும் இன்று பனையின் பயன்களை உணர்ந்து அதைப் பாதுகாத்திட—பேணிவளர்த்திட முன்வந்துள்ளது தமிழ்ஈழத்தின் பொருளாதாரத் துறையில் ஒரு நல்ல திருப்பு முனையாகும்!

தமிழ்ஈழம் தன்னுட்சியுள்ள ஒரு நாடாக இன்று இருந்திருந்தால் -- பனைவளத்தைப் பயன்படுத்தி எத்தனையோ கைத்தொழிற்சாலைகளை நிறுவி—மக்களுக்கு வேலைவாய்ப்பு தரவும் பணம்பொருள் உற்பத்தியில் ஈடுபடவும் முடியும்!

தமிழ் ஈழத்தின் ஆட்சி தமிழனின் கையில் இல்லாத காரணத்தினுல்—பனந்தொழில் அபிவிருத்தி பற்றி இன்றைய அரசுக்கு நீதியரசர் சிவசுப்பிரமணியம் அவர்களின் தலைமையில் பனந்தொழில் அபிவிருத்திபற்றி ஆராய நியமிக்கப்பட்ட குழுவினர்—பரிந்துரைத்திருந்த அருமையான திட்டங்கள் அனைத்தும் செயற்படாமல் ஐஸ்பெட்டிக்குள் முடங்கிக்கிடக்கின்றன!

இந்த நிலையில், ஆங்காங்கே தமிழ் மக்கள் தாமாகவே முன்வந்து பனை இயக்கங்களை ஆரம்பித்து நடத்தி வருகிருர்கள். மில்க்வைற் நிறுவன அதிபர் திரு. கனகராசா அவர்கள் இலவசமாக பனைவிதைகளை வழங்கி வருவதுடன் பனையின் முக்கியத்துவத்தை மக்களிடையே பரப்புவதில் பெரிதும் அக்கறை காட்டிவருகிருர்! இதேபோல பனந்தொழில் அபிவிருத்தி சபையும், 18-11-74 முதல் 18-12-74 வரை பனைவிதை நாட்டும் இயக்கங்களை தமிழ் ஈழம் முழுவதும் நடத்துகிறது!

தமிழ் மக்களிடையே பனை அபிவிருத்தியில் ஏற்பட்டுள்ள இத்தகைய உற்சாகத்தையும் ஆர்வத்தையும் வரவேற்கிருேம்; பாராட்டுகிருேம் !!

இந்திய சுதந்திரப் போராட்டத்தின்போது—காந்தியார் முன்வைத்த கதர் இயக்கம் போல—தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தின்போது "பனை இயக்கம்" சுதேசிய இயக்கமாக வளர்ந்து —பயன்தர வாழ்த்துகிருேம்!

---

# மனித உரிமைகள் தினமும் ஈழத்தமிழர் உரிமை முழக்கமும்

மகாத்மா காந்தியடிகள் அகிம்சையை ஆயுதமாகக் கொண்டு நடத்திய தர்ம யுத்தத்தின் மூலம் பாரத தேசம் விடுதலைபெறக் காரணமாக அமைந்தது சாதகமாக உருவெடுத்த உலக அபிப்பிராயமே!

உலக அபிப்பிராயத்தைச் சாதகமாக மாற்றுவதற்கு பாரத நாட்டில் காந்தியடிகள் நடத்திய அறப்போருக்கு வெளிநாடுகளில் அந்நாட்களில் வசித்து வந்த இந்திய மக்கள் குறிப்பாக அண்மையில் காலஞ்சென்ற கிருஷ்ணமேனன் போன்ருர் ஆற்றிய தொண்டும், பணியும் நினைவுகூரத்தக்கது; பின்பற்றக்கூடியது.

இரண்டாவது உலக மகா யுத்தத்தை அடுத்து கன்சர்வேற்றிவ் கட்சியின் செல்வாக்குத் தணிந்து இங்கிலாந்தில் அட்லியைத் தலைவராகக் கொண்ட தொழிற்கட்சி பதவியில் அமர்ந்ததும் காலம் கனியக் காரணமாக அமைந்தது.

அதேபோல் மகாத்மாவின் அதே அகிம்சை வழியில் வண மாட்டின் லூதர் கிங் நடத்திவந்த நிறவேறு பாட்டிற்கு எதிரான போராட்டமும் பெருமளவு முன்னேற்றம் பெறக்காரணம் உலக அபிப்பிராயமே! உலக அபிப்பிராயம் சாதகமாக மாறிவந்த சூழ்நிலையில் அமெரிக்காவில் கெனடி அரசு பதவிக்கு வந்தது மேற்படி சாதக நிலையை மேலும் துரிதப்படுத்திற்று.

அமெரிக்க நாட்டின் தென்புறத்தில் அமைந்த ராச்சியங்களில் நீக்கிருே மாணவர்களுக்கு பல்கலைக்கழக நிறவேறுபாடு திரவும் வண மாட்டின் லூதர் கிங் அவர்களுக்கு, கெனடி ஜனதிபதியாகப் பதவியேற்று வரப் பிரசாதமாக அமைந்துவிட்டது மறைக்கவோ மறுக்கவோ முடியாத உண்மையாகும்.

அதே பேன்று போத்துக்கல் நாட்டில் சர்வாதிகாரம் ஒழிந்து ஜனநாயகம் தலையெடுத்தது—ஆபிரிக்காவின் அங்கோலா நாட்டின் சுதந்திரத்தைத் துரிதப்படுத்தி வருவது நாம் அறிந்ததே! போத்துக்கல் நாட்டில் ஏற்பட்ட மாற்றம் அங்கோலா நாட்டின் விடுதலைக்கு வழி உண்டாக்க காலனித்துவத்துக்கு—குறிப்பாகபோத்துக்கல்லின் அடக்குமுறைக்கு—எதிரான உலக அபிப்பிராயமே முழுமுதற் காரணமாகும்.

ஏன் தென் ஆபிரிக்காவிலும் மனமாற்றங்கள் ஏற்படாது இல்லை. அங்குள்ள கறுப்பு இன மக்களும், வெள்ளையரும் சம உரிமைகளோடு ஒரே நாட்டினத்தினராக சக வாழ்வு வாழ முடியாவிட்டால் கறுப்பு இன மக்களுக்கு தனி அரசு வழங்கப் போகுமளவிற்கு வெள்ளை இனத்தவர்கள் மனப்பக்குவம் பெற ஆரம்பித்திருக்கிருர்களென்ருல் இன ஒதுக்கல் சட்டங்களுக்கு மாருன உலக அபிப்பிராயமே அதற்கும் காரணமாகும். ஆகவே, எந்த நாட்டினமும் உலக அபிப்பிராயத்துக்கு மாருக நீண்டகாலம் சர்வாதிகாரப் போக்குடன் தாக்குப்பிடிக்க முடியாது. ருெடிசியாவும், இலங்கையும் இன பேதக் கொள்கைகளைக் கடைப்பிடிப்பதைத் தொடருவதாலுல் உலக நாடுகளால் அவை முற்ருகப் புறக்கணிக்கப்படும் காலம் வெகு தூரத்தில் இல்லை.

இலங்கையில் இடம் பெறும் இனபேத, இன ஒழிப்பு நடவடிக்கைகளை உலக நாடுகள் இன்னும் நன்கு அறிய வரவில்லை. அதற்கான வாய்ப்பைத் தமிழ் மக்கள் இதுவரை காலமும் ஏற்படுத்தவில்லை. அண்மையில் உள்ள தமிழ் நாட்டில்தானும் இங்குள்ள தமிழ் மக்களின் அவலநிலை பற்றி அங்குள்ள மக்கள் தெளிவாக அறிந்துகொள்ளவில்லை. உலகத் தமிழ் இளைஞர் இயக்கத் தலைவர் இரா. ஜனர்த்தனன், இங்கிருந்து குடிபெயர்ந்த தமிழர் தலைவர் மணவைத்தம்பி, கண்ணதாசன், முத்தமிழ் வித்தகர் கி. ஆ. பெ. விசுவநாதன் தமிழரசுத் தலைவர் ம. பொ. சி. போன்ருர் எடுத்துவரும் முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியவையே. இன்னும் அதிக பணி தமிழ் நாட்டிலே செய்யப்பட வேண்டும் தமிழக மக்கள் ஈழத் தமிழர் உண்மை நிலையை நன்கு தெரிந்துகொள்வதற்கு.

அண்மையில் நடைபெற்ற சாம்ராச்சிய நாடுகளின் பாராளுமன்ற மாநாட்டில் தமிழர் கூட்டணிப் பிரமுகர் வி.என். நவரத்தினம் பா.உ. அவர்கள் ஈழத் தமிழர் பிரச்சினையை முதன் முதலாக மன்றம் ஒன்றில் விவாதப் பொருளாக்கியிருக்கிருர். பொதுநல அமைப்பு ஐ. நா. சபை, கூட்டுச்சேரா நாடுகள் அரங்கு போன்ற ஏனைய பிற உலக அரங்குகளிலும் ஈழத் தமிழர் பிரச்சினை அலசப்பட வேண்டும். அதற்கு ஊக்கம் தரும் இலக்கியங்கள் உலக மொழிகள் பலவற்றிலும் வெளிவர வேண்டும்; வரலாற்றியலார் —அறிஞர் செயல்படுவார்களாக!

இதனையொட்டிச் சிந்திப்பதற்கும், செயற்படுவதற்கும் "மனித உரிமைகள் தினத்தை"த் தமிழர் கூட்டணியினரும் அதன் அங்கத்துவ கட்சிகளும் சிறப்பாக தமிழ் இளைஞர் இயக்கத்தினரும் நல்லபடி பயன்படுத்த வேண்டும். அந்நாளில் இயக்கங்கள்பல இடம்பெறட்டும் தமிழ் ஈழத்தில்!

வெளிநாடுகளில் வதியும் தமிழ் மக்கள் — சிறப்பாக ஈழநாட்டுத் தமிழர் "ஈழத் தமிழர் உரிமைப் பிரச்சினைகள்" உலகின் கவனத்தையும் உலகின் மனச்சாட்சியையும் ஈர்ப்பதற்கு உரிய பங்கைச் செலுத்த முன்வர வேண்டும். "வங்களாதேஷ்" விடுதலைபெற வெளிநாடுகளில் சீரோடும் சிறப்போடும் வாழ்ந்த வங்காள மக்கள் ஆற்றிய பணி அவர்களுக்கு ஊக்கமளிக்கும் உதாரணமாக அமைய வேண்டும்.

ஆகவே, அயல் நாடுகளில் வாழும் தமிழ் மக்கள் எதிர் வரும் டிசெம்பர் 10ஆம் நாளில் வரும் "மனித உரிமைகள்" தினத்தில் கருத்தரங்குகள் பொதுக்கூட்டங்களை நடத்துவதன் மூலம் உலகின் மனச்சாட்சியை ஈழத் தமிழர் பிரச்சினையின் பால் திருப்ப முயல்வார்க்ளாக.

தாயகத்தின் மீட்புக்கு வெளிநாடுகளில் வதிந்த யூத மக்களும், வங்களாதேஷ் மக்களும் நடத்திய இயக்கங்கள் அவர்களுக்குவழிகாட்ட வேண்டும். தமிழ் ஈழத்தின் விடுதலைக்குத் தலைவர்கள் மட்டுமல்ல தமிழர் ஒவ்வொருவருமே தமது பங்கைச் செலுத்த முன்வர வேண்டும்; முன்வருவார்களாக.

—ஆனந்தன்.

---

# புண்டோராவின் பேழையும் பட்ஜட் பேழையும்!

கிரேக்கநாட்டுப் புராணக் கதைகளைப்பற்றி உங்களுக்குத் தெரியுமென்று நான் நினைக்கிறேன். கிரேக்க நாட்டுப் புராணக் கதையிலே பண்டோராவின் பேழையைப்பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். ஒலிம்பஸ்மலையிலேயுள்ள தேவர்கள் அந்தப் பேழையைப் பண்டோராவுக்குப் பரிசாகக் கொடுத்தார்கள். அதற்குள் என்ன இருக்கிறது என்று பார்ப்பதற்காக அவர் அதைத்திறந்தார். அந்தப் பேழைக்குள்ளிருந்து வெளிவந்ததை நீங்கள் அறிவீர்கள். தொல்லை, கஷ்டம், துயரங்கள் அனைத்துமே வெளிவந்தன. உலகத்திலே இன்றைக்குள்ள கஷ்டங்கள் எல்லாவற்றுக்கும் அந்தப் பேழையைத் திறந்ததுதான் ஒரு காரணம் என்று புராணக்கதை கூறுகிறது அதைக் கண்டதும் கஷ்டங்கள் எல்லாம் வெளிவருகிறதென்று சொல்லி பண்டோரா அந்தப் பேழையை மூடிவிட்டார்கள். அப்பொழுது நம்பிக்கை மட்டுமே அந்தப் பேழைக்குள் மிச்சமாக இருந்தது. அதனுலேதான் நாம் உலகத்திலே ஓரளவுக்கு இயங்கக்கூடியதாக இருந்தது அந்த நம்பிக்கையும் வெளியே வந்திருக்குமென்ருல், உலகமே இயங்கியிருக்க முடியாது.

நவம்பர் 6 ஆம் தேதி நிதியமைச்சரவர்கள் இங்கே வந்து பட்ஜெட் பேழையைத் திறந்த நேரத்திலே அந்த நம்பிக்கைகூட அவரது பட்ஜெட் பேழையிலிருந்து வெளியேறிவிட்டதை நாம் காணக்கூடியதாக இருந்தது. பண்டோராவின் பேழையிலே நம்பிக்கை இருந்தது. ஆனல் இந்த பட்ஜெட் பேழையிலேயிருந்த நம்பிக்கைகூட வெளியே பறந்துவிட்டது.

— உடுவில் பா. உ. வி. தர்மலிங்கம்
(தேசிய பேரவையில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மேற்கு ஜெர்மனியிடமும் ஈரானிடமும் உங்கள் சோசலிசம் அடங்கிவிட்டது! கொடுத்த வாக்குறுதிகள் அனைத்தையும் மீறிவிட்டீர்கள்!"

## வரவு செலவுத்திட்ட விவாதத்தில் உடுவில் பா. உ. கண்டனம்

"இந்த அரசாங்கம் 1970ஆம் ஆண்டு தேர்தலுக்குச் சென்று அதைத் தொடர்ந்து நாட்டின் ஆட்சிப் பொறுப்பை ஏற்று தனது முதலாவது சிம்மாசனப் பேச்சை நிகழ்த்தியபொழுது மக்களுக்கும் நாட்டுக்கும் கொடுத்த வாக்குறுதிகளை பரிசிலனை செய்யவேண்டும். அவற்றைப் பரிசிலனை செய்து அவ்வாக்குறுதிகளை எவ் விதத்திலே நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பதையும் ஆராயவேண்டியது எமது முக்கிய கடமையாக இருக்கிறது.

"முதலாவது சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்திய பொழுது அதை நாம் கேட்ட நேரத்திலே புராணக் கதைகளிலே கூறப்படுகின்ற இராம இராஜ்யம் இந்நாட்டிலே ஏற்படப்போகிறது. செல்வமெல்லாம் பரவலாக்கப்பட்டு ஈவாரும் இல்லை கேட்பாருமில்லை என்ற ஒரு நிலை இந்நாட்டிலேற்படப் போகிறது என்று அகமகிழ்ந்தோம். நீதி, நியாயம் இந்நாட்டில் நிலைக்கப்போகிறதென்று நாம் மகிழ்ந்தோம். ஆனால் இன்றைக்கு நீதிதேவன் மறைந்து அநீதிதான் நீதிதேவனின் இடத்தை ஆக்கிரமித்திருப்பதை நாம் கண்ணூடாகக் காண்கிறோம்!

வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்குவேண்டிய நடவடிக்கைகளை இந்த அரசாங்கம் எடுக்கும் என்று கூறியது. எந்த விதத்தில் வாழ்க்கைச் செலவைக் குறைப்போம் என்று இந்த அரசாங்கம் ஒரு துண்டுப் பிரசுரத்தையும் தேர்தல் காலத்தில் வெளியிட்டது. கோடிக்கணக்கில் அந்தத் துண்டுப் பிரசுரங்களை இவர்கள் நாடு முழுவதும் விநியோகித்தார்கள். அந்தத் துண்டுப் பிரசுரத்தில் எவ்விதம் விலைவாசிகளைக் குறைப்போம் என்று எடுத்துக்கூறி இருந்தார்கள். அதிலே குறிப்பிட்டபடி ஒரு பொருளின் விலையாவது குறைக்கப்படவில்லை என்பதை இந்தச் சபை உணர வேண்டும்.

அரிசி விலை அன்று ஒரு கொத்து 1.15 சதமாக இருந்தது. இன்று அரிசி விலை யாழ்ப்பாணத்தில் ஏழு ரூபாவுக்கு உயர்ந்துவிட்டது. அன்று 35 சதமாக விற்ற பாண் ரூபா 1. மேல் ஆகிவிட்டது. அன்று 34 சதமாக இருந்த மாவு இன்று ரூபா 1 மேல் ஆகிவிட்டது.

பால்ரின்னின் விலை அன்று 1-25சதமாவிருந்தது. இன்று 3.50. 4.00 ரூபாவுக்குக் கூட வாங்குவது கஷ்டமாக இருக்கிறது. அன்று சீனியின் விலை 72 சதமாக இருந்தது. இன்று 7.50 சதமாகிவிட்டது. இதுபோல இன்னும் எத்தனையோ பொருட்களின்விலையை வாசிக்கலாம். அவற்றையெல்லாம் வாசித்துக் காட்டிச் சபையின் நேரத்தை வீணுக்க விரும்பவில்லை.

இந்த அட்டவணையில் கூறியிருக்கும் ஒவ்வொரு பொருளினதும் விலையும் பத்து

—8-ம் பக்கம் பார்க்க

## ஒரு லொறியை...

—1-ம் பக்கத் தொடர்

ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், யாழ் கூட்டுறவுச் சங்கம் ஒரு வியாபார நிலையமாக அன்றி வேலை வழங்கும் நிலையமாகவே இயங்குவதாகவும் அவர் எழுதியிருக்கிறார்.

யாழ்ப்பாணக் கூட்டுறவுச் சங்கத்திலே நடப்பதை நான் ஒரு சிறு உதாரணத்துக்கு இங்கே கூறுகிறேன். யாழ் கூட்டுறவுச் சங்கத்திலே 3 லொறிகள் இருக்கின்றன. அதில் இரண்டு இன்று பாவிக்கக்கூடிய நிலையில் இல்லை. ஒன்று தான் பாவிக்கக்கூடியதாக இருக்கிறது. இதை இயக்குவதற்கு 20 சாரதிகளை சங்கம் நியமித்திருக்கிறது. இவ்வாறு வேலை வழங்குவதால் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கமுடியாது. சங்கங்கள்தான் குட்டிச்சுவராகும்.

**இன்று இந்நாட்டில் இலஞ்ச ஊழல் என்றால் அதன் மறுபெயர் கூட்டுறவு என்று ஆகிவிட்டது."**

—வரவு செலவுத் திட்ட விவாதத்தில் உடுவில் பா.உ. பேசியது.

## 4000கள்ள கூப்...

—1-ம் பக்கத் தொடர்

இன்று அம்பலத்துக்கு வந்துள்ளது. திட்டத்தட்ட 4000 கள்ளக் கூப்பன்களுக்கு பங்கீட்டுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வந்துள்ளதாக சொல்லப்படுகிறது.

இங்கு 42 கிளைகள் உள்ளன. ஒவ்வொரு கிளையிலும் 100க்கும் 400க்கும் இடைப்பட்ட கள்ளக்கூப்பன்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பலவருட காலமாக நடைபெற்றுவந்த மோசடியினால் அரசுக்கு கோடிக்கணக்கான ரூபாய்க்கு நட்டம் ஏற்பட்டுள்ளது.

கூட்டுறவில் அரசியலைக் கலந்ததின் விளைவே இது என்று மக்கள் பேசிக்கொள்கிறார்கள். இதுமட்டுமல்ல இங்கு 189 பேர் தானும் கடமையாற்றுவதற்கு தேவையானவர்கள். ஆனால் இங்கு 540 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு லொறிக்கு 20சாரதிகள் கடமையாற்றும் புதினமும் இங்குதான் நடக்கிறது.

அண்மையில் பிரதமர் யாழ்நகர் வந்தபொழுது யாழ் அரசாங்க அதிபர் பர்மிட்டுக்கு யா. ப. கூ. ச. பொது முகாமையாளரிடம் சீனிவாங்கியதையும், தன்னைக் கேளாமல் சீனி கொடுத்தமையினால் ஆத்திரம் அடைந்த தலைவர் துரையப்பா பொதுமுகாமையாளரை வேலையை விட்டு நீக்கியதையும், யாழ் மக்கள் இன்னும் மறக்கவில்லை. ஆகவே இந்த 42 கள்ளர்களையும் நீதிமன்றத்தில் நிறுத்துவாரா? அல்லது பூசி மெழுகுவாரா? என்பதுதான் இன்றைய கேள்வி.

ஏனெனில் இவர்களை சிறைக்கனுப்பினால் எதிர்காலத்தில் மந்திரிமார் வரும்பொழுது அவர்களை வரவேற்க கூலிப் பட்டாளம் இல்லாது போய் விடுமே என்று கவலைப்படுகிறாராம். ஆகவே இந்த விஷயத்திலாவது பொது மக்களைத் தியாகம் செய்யச் செல்லும் அரசு இந்த தேசத் துரோகிகளைத் தண்டிக்குமா என்று கேட்கும் பொதுமக்கள் தமிழர் கூட்டணி உருவாக்கிய 42 தியாகிகள் அங்கே சிறையில் வாடுகிறார்கள்; திரு. துரையப்பா உருவாக்கிய 42 கள்ளர்கள் இங்கே போதையில் வாழ்கிறார்கள் என்று உள்ளம் கொதிக்கின்றனர்.

—எரிமலை.

## சூரியரை எதிர்...

—1-ம் பக்கத் தொடர்

வேண்டிய பணியை குமார சூரியர் ஏற்றுக்கொண்டார்.

சிறீலங்கா சுதந்திரக்கட்சி என்ற பெயரில் வரவேற்பு நடத்தமுடியாதென்பதை உணர்ந்த விஸ்வமடுவில் அண்மையில் கிளைவிட்ட சில எடுபிடிகள், தமக்குத்தாமே தபால் கந்தோர் திறப்பு விழா அமைப்புக்குழு என பெயரிட்டுக்கொண்டனர். இவர்களது போர்வையை நன்கு தெரிந்துகொண்ட இளைஞர்களும் வர்த்தகர்களும் அவர்களுக்கு ஒத்துழைப்போ பண உதவியோ வழங்க மறுத்தனர். கடைகளுக்குபோதிய பாதுகாப்பு தருவதாகவும் திறக்கும்படியும் இந்த எடுபிடிகள் வர்த்தகர்களை வேண்டினர். அவர்கள் தாமாக விரும்பி குமார சூரியரை பகிஷ்கரித்து கடையைபூட்டப்போவதாக சொல்லிவிட்டனர். இளைஞர் மத்தியிலும் பகிஷ்கரிப்பு பிரச்சாரம் பகிரங்கமாக நடப்பது கண்ட எடுபிடிகள் இரவோடு இரவாக யாழ்ப்பாணத்தில் இருந்து பொலீசாரையும் சி. ஐ. டி.க்காரர்களையும் இறக்குமதி செய்வித்தனர்.

திட்டமிட்டிருந்த பூரண கும்ப வரவேற்பும், ஊர்வலமும் பகிஷ்கரிப்பால் ரத்து செய்யப்பட்டன. எதை எதை எல்லாமோ எதிர்பார்த்து வந்த சூரியர் கடை அடைப்பையும் பகிஷ்கரிப்பையும் கண்டு கொதிப்படைந்தார். கடைகள் கள்ளச்சந்தைப் பொருட்களை விற்பனை செய்வதாக கூறி இப்படியான கடைகளை தன் இளைஞர்கள் அடித்து நொறுக்கி தீமூட்டவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

இரத்தம் சிந்த தயாரான தமிழர் கூட்டணி இளைஞர்கள் தன்னோடு நேருக்குநேர் மோதலுக்கு மேடைக்கு வரட்டும் 'என்று பொலீசார் மத்தியில் சிறிதும் பயமின்றி சவால்விட்டார்.

அவருடைய எடுபிடியான ஒரு அயலூர் குஞ்சு அவரிலும் ஒருபடி மேலே போய், பகிஷ்கரித்த இளைஞருக்கு முத்திரை விற்பனை செய்யப்படமாட்டாது என்றும் ராஜாங்கனையைப்போல் விஸ்வமடு திட்டத்தை மூடவும் தம்மால் முடியும் என்றும் கூறியது. கடைகளை ஒருவாரத்துள் நிரந்தரமாக மூடவைப்பேன் என்றும் அந்த குஞ்சு பயமுறுத்தியது. இவர்கள் பேச்சைக் கேட்டு விஷமமாக இளைஞர்கள் சிரிப்பாய்ச் சிரிக்கின்றனர்.

## தமிழரசு வெள்...

—1-ம் புக்கத் தொடர்

கால் நூற்றாண்டு காலத்து ஈழத் தமிழர் வரலாறும் தமிழரசுக் கட்சியின் வரலாறும் ஒன்றாகவே பின்னிப் பிணைந்து இருந்துவந்துள்ளது.

கட்சியின் அங்குரார்ப்பணக் கூட்டம் கொழும்பில் நடைபெற்றதால், கட்சியின் வெள்ளி விழா சம்பந்தப்பட்ட முதலாவது கூட்டத்தையும் கொழும்பில் நடத்துவதென்று 11.11.74ல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. தமிழரசுக் கட்சியின் கொழும்புக்கிளை இந்நிகழ்ச்சியை பொறுப்பேற்று நடத்த முன்வந்துள்ளது.

### மலர்க் குழு!

கட்சியின் 25 ஆண்டுகால சேவைகளையும் அது முன்னின்று நடாத்திய போராட்டங்களையும் சமுதாய சீர்திருத்தப் பணிகளையும் நினைவு கூரும் வகையில் வெள்ளிவிழா மலர் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. இந்த வெள்ளி விழா மலருக்கு பொறுப்பாக ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது. நாவலர் அமிர்தலிங்கம் தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்த மலர்க்குழுவில் திருவாளர்கள் மு. ஆலாலசுந்தரம் கோவை மகேசன், ஆவரங்கால் சின்னத்துரை, இ. பேரின்பநாயகம் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர்.

வெள்ளிவிழா கொண்டாட்டங்களுக்கு பொறுப்பாளர்களாக திருவாளர்கள் அ. அமிர்தலிங்கம், சு. நடராசா, சி. கதிரவேற்பிள்ளை, வி. தர்மலிங்கம், பா. நேமிநாதன், அ. தங்கத்துரை, வி. என். நவரத்தினம், வே. கயிலாயபிள்ளை ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## அவசரகாலச்சட்..

—1-ம் பக்கத் தொடர்

களை தொடர்ச்சியாக நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

### நாவலர் முழக்கம்!

இத்தீர்மானத்தைவிளக்கி அன்று மாலை காங்கேசன்துறை பட்டினசபை மைதானத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணியின் பிரசாரக் கூட்டத்தில் கூட்டணியின் செயலாளர் நாயகம் நாவலர் அமிர்தலிங்கம் பேசுகையில்; "தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யவோ அல்லது அவர்களுக்கு எதிராக வழக்குத் தொடரவோ 31.12.74க்கு முன்னர் அரசு தவறுமானால் நாம் சட்ட மறுப்பு இயக்கத்தை ஆரம்பிப்பது நிச்சயம். முன்னைய தீர்மானங்களைப் போல இது ஒத்திவைக்கப்படமாட்டாது.

"சிறைச்சாலைகளை நிரப்ப நாம் ஆயத்தமாகிவிட்டோம். எமக்காக சிறைச்சாலைகளைத் தயார் செய்வதற்கே டிசெம்பர் 31 வரை அரசுக்குகாலக்கெடுகொடுத்துள்ளோம்.

"கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு அதிகமாகவும், அதன் பின்னர் காலத்துக்குக் காலமும் கைதுசெய்யப்பட்டு விசாரணையின்றிச் சிறைகளில் தள்ளப்பட்டிருக்கும் இந்தத் தமிழ் இளைஞர்களை விடுதலை செய்யவிடாது வட பகுதியிலுள்ள நீலச்சட்டையும் சிவப்புச் சட்டையும் அணிந்த ஐக்கிய முன்னணி அமைப்பாளர்களே தடுத்து வருகிறார்கள். அவர்களை விடுதலை செய்யவேண்டாம் என்று இவர்கள் பிரதமரின் காலில் விழுந்து மன்றாடிவருகிறார்கள். காவலில் உள்ள தமிழ் இளைஞர்களை விடுதலை செய்தால் தங்களுக்கு ஆபத்து ஏற்படும் என்று இந்த எட்டப்பர்கள் பிரதமருக்கு பயம்காட்டிவருகின்றனர்."

—என்று குறிப்பிட்டார்.

# பனந்தொழில் அபிவிருத்திச் சபை!

18-11-74 தொடக்கம் 18-12-74 முடியும்வரைக்கும் வடக்குக்கிழக்கு மாகாணங்களிலுள்ள தரிசு நிலங்களிலும், வேலியோரங்களிலும், வயல்கரையோரங்களிலும், பாதையோரங்களிலும் பனம் விதைகளை நாட்டி விழாக் கொண்டாட மேற்படி சபை தீர்மானித்திருக்கிறது. இவ்வியக்கத்திற்கு சகலருடைய ஒத்துழைப்பையும் சபை எதிர்பார்க்கிறது.

## வடக்கே பிரதேச . . .

—3-ம் பக்கத் தொடர்

னர் அதன் எந்தப் பகுதியும் பிரதேச சுயாட்சி பெறமுடியாது. அரசியல் சட்டத்தின் 45ம் விதி அதையே வற்புறுத்துகின்றது. அவ்விதியை இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்தது.

அரசியல் சட்டத்தின் 45ம் விதி கூறுவது என்ன? அந்த விதி கூறுகிறதாவது:-

"தேசிய அரசுப் பேரவை அதன் சட்டமாக்கற்தத்துவத்தைத் துறத்தல் ஆகாது, கையளித்தால் ஆகாது; அல்லது எவ்விதமாகவேனும் பராதீனப்படுத்தலும் ஆகாது. அல்லாமலும், துணைநிலைச் சட்ட வாக்கங்களைத் தவிர, வேறுசட்டமாக்கற் தத்துவம் கொண்ட அதிகாரம் ஒன்றை நிறுவுதலும் ஆகாது" கீழே உள்ள விதிகளின்படி சட்டத்தைக் குறிப்பிட்ட இடங்களுக்குப் பிரயோகிக்க சட்டரீதியான ஆட்களை உருவாக்க — இப்படியான சம்பிரதாயங்களுக்கு மட்டும் குறிப்பிட்ட அதிகாரிக்கு அதிகாரம் வழங்கலாம். பேரவை விதிக்கும் நோக்கங்களுக்காகத் துணை நிலைச் சட்டங்களை ஆக்கும் உரிமை ஒரு ஆளுக்கு அல்லது குழுவிற்குக் கொடுக்கலாம்."

இப்படியான ஒரு விதியை ஆதரித்து வாக்களித்துவிட்டுப் பிரதேச சுயாட்சி பற்றி மீண்டும் மீண்டும் முனகுவது யாரை ஏமாற்ற? கம்யூனிஸ்ட் கட்சியின் வடபிரதேசச் செயலாளர் தோழர் வ. பொன்னம்பலம் இதற்குப் பதில் தரட்டும்!

கந்தர் சஷ்டி கவசம்

"அமரரிடர் தீர வமரம் புரிந்த
குமரனடி நெஞ்சே குறி."


15 மில்க்வைற் நீல சோப் மேலுறைகளை அனுப்பி கந்தர் சஷ்டி கவசம் என்ற புத்தகத்தை பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க் வைற் சவர்க்காரத் தொழிற்சாலை
த. பெ. எண் 77, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைவணங்காத் தமிழ் வீரன்

# வண்ணை ஆனந்தன்!



"நான் கள்வனில்லை; கொலைகாரனில்லை; சமூக விரோதியுமில்லை; இருப்பினும் யந்திரத் துப்பாக்கி தாங்கிய பொலீசுடன் என் வீட்டிற்கே கைதியாக அனுப்பப்பட்டுள்ளேன். இந்தத் துப்பாக்கி என்னைக் கொன்று விடுவேன் என்று என்னைப் பயமுறுத்துகின்றது; உயர்ந்த இலட்சியத்துக்காக காந்தீய நெறியிற் போராடும் கூட்டத்தைச் சேர்ந்தவன் நான். இந்தப் பணிக்கு என் உயிரே போனாலும் போகட்டும்! ஆனால் என் பிணத்துக்கு என் தலைவர் தந்தை செல்வா அவர்களின் கையினால் மாலை கிடைக்குமாயின் அதுவே என் வாழ்வின் பயன். அண்ணா கூறிய எதையும் தாங்கும் இதயம் அவரது ஈழத்துத் தம்பிகளுக்கும் நிரம்ப உண்டு."

—தலைவணங்காத் தமிழ் வீரன் வண்ணை ஆனந்தன் அவர்கள்(ஆனந்த விநாயகம்) கைதுசெய்யப்பட்டு சிறையில் தள்ளப்பட்டு பல திங்களின் பின்னர், கடும் சுகவீனமுற்றிருந்த தன் அருமைத் தாயாரைப் பார்ப்பதற்கு சிறைக்கைதியாக பொலீஸ் காவலுடன் தனது வீட்டிற்கு கொண்டுவரப்பட்டபோது, வீட்டில் அவரைப் பார்ப்பதற்கு வந்திருந்த நண்பர்களுடன் உரையாடிய நேரத்தில் மேற்கண்டவாறு கணீரென்ற குரலில் உறுதியுடன் கூறிய வார்த்தைகள் இன்னும் நம் நெஞ்சத்தில் ரீங்காரமிடுகின்றன.

கவிஞர் காசி ஆனந்தனுக்கு அடுத்தபடியாக 1972ம் ஆண்டு யூன் திங்களில் கைதுசெய்யப்பட்ட 32 வயது இளைஞரான வண்ணை ஆனந்தன் கடந்த இரண்டரை ஆண்டுகளாக வெலிக்கடைச் சிறையில் விசாரணை இன்றி தொடர்ச்சியாகச் சிறைவைக்கப்பட்டுள்ளார்.

திரு. வண்ணை ஆனந்தன் அவர்களினால் நிறுவப்பட்ட கல்வி, கலை கலாச்சார காப்புக் கழகத்தைச் சேர்ந்த திரு. பொ. நடராசா அவர்கள் வண்ணை ஆனந்தன் பற்றி எழுதியுள்ள கட்டுரையை கீழே தருகிறோம். —ஆசிரியர்.

1944ம் ஆண்டில் வண்ணார் பண்ணையில் புகழ்மிக்க குடும்பத்தில் பிறந்தவர் வண்ணை ஆனந்தன். தந்தை பெயர் திரு. நமசிவாயம். தாயார் பெயர் சிவநாயகி-இவருக்கு 4சகோதரிகளும் ஒரு சகோதரனும் உண்டு. இவரது பேரன் தமிழிலும், ஆங்கிலத்திலும் பாண்டித்தியம் உடையவர். இதனால் இளவயதிலேயே நல்ல தமிழ் நூல்களைக் கற்று தமிழ்ப்பற்றுடையவராய் விளங்கினார். மேலும் சிறுவயது முதலே பேரறிஞர் அண்ணா மேல் அளவுக்கதிகமான பற்றுக்கொண்ட இவர் சாதிசமய வேறுபாடுகளால் தமிழினம் பிளவுபட்டு நிற்பதை உணர்ந்து அவற்றைக் களைவதில் அதிதீவிரம் காட்டி வருகின்றார்.

வண்ணையின் சாதிவெறி பிடித்த — உயர்சாதியென தம்மை அழைக்கும் வட்டத்தில் பிறந்த இவர், சாதிக்கெதிராக போர்க்கொடியைத் தூக்கியதோடு ஆலயப் பிரவேசம் சமபந்தி போசனம், போன்றவற்றில் அதிதீவிரம் கொண்டிருந்தார். இதனால் உறவினர் மத்தியில் சர்ச்சைக் குரியவராக விளங்கியபோதும், யாருக்கும் உதவும் பண்பு, ஒழுக்கம், எதிரியென எண்ணி நடப்பவனையும், பேச்சுவன்மையால் கவரும் ஆற்றல் ஆகியவையால் யாரும் இவரை விரோதியாகக் கருதியதில்லை.

சிரிக்க சிரிக்கப் பேசுவதோடு தன் கருத்தையும் யாவரும் ஏற்கும் வண்ணம் எடுத்துக் கூறிவிடும் ஆற்றல் மிக்கவர். இவரது அரசியல் மிகமிக இளவயதில் ஏற்பட்டதாகும். யாழ் இந்துக் கல்லூரியில் இவரது ஆசிரியராக இருந்த கம்யூனிஸ்ட் அப்போது யாழ். மாநகர சபை தேர்தலில் போட்டியிட்டு வந்த காலத்தில் அவரது சமூகத்தொண்டால் கவரப்பட்டு அவரது வெற்றிக்காக உழைத்தவர். ஆனால் என்றும் கம்யூனிஸ்ட் கட்சியில் இருந்ததில்லை. ஆனால் சமஅந்தஸ்துக் கொள்கை காரணமாக சமசமாஜகட்சி ஆதரவாளராக இருந்துள்ளார். ஆனால் மொழிக் கொள்கையில் அரசியல் சந்தர்ப்பவாதம் பேசிய சமசமாஜ கட்சியை பின்னர் வெறுத்தொதுக்கினர்.

இவரது நேரடி அரசியல் வாழ்வு ஆரம்பமானது சத்தியாக்கிரக நேரத்திலாகும். தாய்மொழிப்பற்று மிகுந்த இவர் சத்தியாக்கிரக காலத்தில் மாணவத் தலைவராக பங்கேற்றார். இக்கால கட்டத்தில் டாக்டர் இ. மு. வி. நாகநாதன் அவர்களின்நேரடிப்பழக்கத்துக் குள்ளான இவர் டாக்டரின், பண்பாலும், நேர்மையாலும், ஆழ்ந்தமொழிப் பற்றாலும்,சாதி சமய வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்ட அவரது உயர்ந்த உள்ளத்தாலும் கவரப்பட்டு அன்றே அவரது சீடரானார்.

டாக்டரின் தொடர்பாலும் கொட்டடி தமிழரசு சிவரெத்தினத்தின் நட்பாலும் தமிழரசு வாலிப முன்னணியில் உறுப்பினரான இவர், குறுகியகாலத்துள் வா. முன்னணியின் மத்திய செயற்குழு உறுப்பினராகியும் பணியாற்றினார். இவரது கணீரென்ற குரலும், பேச்சுவன்மையும் பலரைக் கவர்ந்தன. இதனால் யாழ்ப்பாணத்து கலை, இலக்கிய, அரசியல் மேடைகளில் எல்லாம் இவரது குரல் ஒலித்தது.

இலங்கையின் பேச்சுக்கலை பற்றி எழுந்த 'பேச்சாளராக' என்ற நூலின் ஆசிரியரும் வளரும் பேச்சாளர் வரிசையில் இவருக்கு முக்கியத்துவமும் முதன்மையும் கொடுத்து அந்த நூலில் இவரைப்பற்றி எழுதியிருப்பது இவரது பேச்சுக்கலைக்குக் கிடைத்தவெற்றியாகும்.

தமிழரசுக் கட்சியின் கூட்ட, மாநாட்டு விளம்பரங்களெனில், "கூப்பிடு வண்ணை ஆனந்தனை" என்கின்ற அளவு பிரச்சாரக்கலை இவருக்குக் கைவந்தவொன்று. சரித்திரச் சிறப்புமிகு மாவை தமிழரசு வா. மு. மகாநாட்டின் மகத்தான வெற்றிக்கு மூலகர்த்தாக்கள் இருவரில் ஒருவர் சேனாதிராஜா. மற்றது இவர். இவரது தன்னலமற்ற தொண்டும், ஆழ்ந்த தமிழ்ப் பற்றும், சமூகசீர்திருத்தத்தில் கொண்ட ஈடுபாடும் காரணமாக டாக்டர் நாகநாதன் இவரை தனது சொந்த மகனைவே விரும்பி நேசித்தார்.

இக்காலகட்டத்தில் தாழ்ந்த தமிழினத்தைத் தட்டி எழும்பிட நாடகம் தலைசிறந்த சாதனம் எனக் கண்டு கொட்டடி தவலிங்கத்துடன் இணைந்து உதய சூரியன் நாடக மன்றத்தை அமைத்து, சமூகசீர்திருத்த, தமிழ் பற்றை ஊட்டவல்ல நாடகங்களை தயாரித்து மேடையேற்றியதுடன், முக்கியபாத்திரங்களில்தோன்றி இன்று வரை யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த நடிகர்களில் ஒருவராகவும் விளங்குகின்றார். மணிபல்லவன், இலட்சியவாதி, ஏன் சிரித்தாய்? 'பங்குனித் திங்கள்' போன்றவை இவரது நடிப்புத் திறமைக்கும் பெருமை சேர்க்கும் நாடகங்கள்.

இதில் 1965தேர்தல்காலத்தில் தமிழரசுப் பிரச்சாரத்துக்கென்றே புனையப்பட்டது 'பங்குனித் திங்கள்' இவரது அனல் கக்கும் வசனங்களும், கலையம்சம் நிறைந்த கதையமைப்பும் பலராலும் புகழ்ந்து விமர்சிக்கப்பட்டதாகும். இயக்கப்பிரச்சாரத்துக்காக தி. மு. க. பாணியில் அமைந்த முதலாவது நாடகம் ஈழத்தைப் பொறுத்தவரை இதுவே. கொழும்பில் சரவணபவா நாடகமன்றத்தினால் ஒழுங்குசெய்தநாடக விழாவில் கலந்து சிறந்த நடிகர் விருதையும் 1965ல் தட்டிக்கொண்டார். இவரது 'ஏன் சிரித்தாய்?' நாடகம் அவ்விழாவில் மேடையேறியது. இவற்றுடன் பல இலக்கிய, சமூக சீர்திருத்தக் கட்டுரைகளையும் எழுதிய இவர் வளரும் எழுத்தாளராகவும் விளங்குகின்றார்.

1967ல் அரசாங்க சேவையில் சேர்ந்த இவர்சிலகாலம் பதவி காரணமாக கலைஇலக்கிய, அரசியல் உலகைவிட்டு வெளி மாகாணத்தில் வாழ்ந்தாலும், விடுமுறைகளின் போது யாழ் வந்து தம் பணியை தொடர்ந்ததுடன் வாழ்ந்த பிரதேசங்களில் எல்லாம், சமூகத் தொண்டில் [illegible] யால் சிறந்த சமூக நிலையங்கள் பல. அவற்றுள் வண்ணை தமிழரசுக் கிளையின் சொந்தக் கட்டடம், கலாசோதி சனசமூக நிலையம், திருக்குறள் முன்னணிக்கழகம், போன்றவை குறிப்பிடத்தக்கவை. இவற்றுள் சமூக ஏற்றத்தாழ்வுகளை நீக்கிட சீர்திருத்த இயக்கமாக மலர்ந்தது திருக்குறள் முன்னணிக்கழகமாகும். தமிழினத்தின் நல்வாழ்விற்கு பல் முனைப் போராட்டம் நடத்தப்படவேண்டும் என அடிக்கடி கூறும் இவர் செயலிலும் தன்னால் முடிந்தவரை அமைத்ததின்விளைவே திருக்குறள் முன்னணிக் கழகமாகும். இக்கழகத்தின் சார்பில் பேரறிஞர் அண்ணா நினைவு தினத்தை ஆண்டுதோறும் மாபெரும் பொதுக்கூட்டமாக நடத்திவருவதுடன் வண்ணைக் கிராமத்தில் உள்ள சகல ஆலயக் கதவுகளையும் சகல மக்களுக்கும் திறந்துவிடவும்உழைத்தார்.

ஒரு இனம் தனது பண்பாட்டுச் சிறப்பை, கலை, கலாச்சாரத்தை பேணி வளர்த்தால் அரசியல் சதியால் அழிந்து படாமல் நிலைத்து வாழும். இன்றைய சூழ் நிலையில் ஆட்சியின் திட்டமிட்ட சதியால் தமிழினம் சகல வழியிலுமே அழிவின்விளிம்பில் நிறுத்தப்பட்டுள்ள இச்சூழ்நிலையில் கலாச்சார மறுமலர்ச்சி காண இவரால் தோற்றுவிக்கப்பட்டதே கல்வி, கலை, கலாசாரக் காப்புக் கழகம். முற்றிலும் கட்சி அரசியலுக்கப்பால் இக்கழகத்தை நிறுவி சிறந்ததொண்டாற்றி வந்தார். வண்ணை ஆனந்தன், ஓவியர் பெனடிக்ற், நியாயவாதி சி. நாகராஜா, ஆசிரியமணி தம்பிரெத்தினம், காலஞ்சென்ற மாவட்ட நீதிபதி தனபாலசிங்கம் போன்றோர் இவரது பணிக்கு ஆர்வமும், ஒத்துழைப்பும் நல்கினர்.

இக்கழகம் குறுகிய காலத்தில் வடமாகாணம் பூராவும் பரவி, கலை, இலக்கியப் பணி புரியும் அனைவரையும் தன்பால் ஈர்த்துக் கொண்ட கலைஞர் படையாய் விளங்குகின்றது. இக்கழகத்தின் செயல் திட்டங்களாலும், அபரிதவளர்ச்சியாலும் கவர்ந்திழுக்கப்பட்டபேரறிஞர். வண. தனிநாயகம் அடிகளார் இக்கழக காப்பாளராக இருந்து கடமையாற்றி வருகின்றார். இக்கழகத்தின் மூலம் வடக்கு, கிழக்கு, மலையகம், எங்கும் உள்ள கலை, இலக்கிய மன்றங்களை ஒன்றிணைத்து ஆண்டுக்கொரு முறை ஒவ்வொரு மாவட்டத்தில் கலை, இலக்கிய மாநாடுகள் நடத்தல்; தமிழ் மாணவமாணவியருக்கு புலமைப் பரிசில் வழங்கல், நூல்வெளியீடு, தமிழ்ப் பகுதியில் உள்ள சரித்திரப் பிரசித்திவாய்ந்த கலாச்சார முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைப் பாதுகாத்தல் போன்ற மிக உயர்ந்த இலட்சியங்களை உடையது இக்கழகம்.

மன்றங்களை இணைக்கும் பணியில் ஒவ்வொரு மன்றத்தினரையும் நேரே சந்தித்து கருத்துரை வழங்கி, இன்றைய தமிழினத்தின் அவலநிலையை எடுத்தியம்பி வெற்றிகண்டு, யாழ்ப்பாணம், திருமலை ஆகிய இரு மாவட்டங்களில் மட்டும் ஏறக்குறைய 100 மன்றங்களை இணைத்தார். இதன் தொடர்பாக, மட்டுநகர், மலைநாடு ஆகிய மாவட்டங்களுக்கும் சென்று இப்பணியை பூர்த்திசெய்யுமுகமாக கடிதத்தொடர்புகளைஏற்படுத்தியிருந்தவேளை 72 யூன் மாதம் ஆட்சியினர் இவரை தடுப்புக்காவலில் வைத்தனர். இம்முயற்சிகளுக்கெல்லாம் தன் சொந்தப்பணத்தையே வாரி இறைத்தார். இவர் இல்லாமல் நாம் இங்கு வலக்கரம் இழந்து நிற்கின்றோம். இவர் யாழ் மாவட்டத்துக்குபதவி மாற்றம் பெற்றுவந்த ஒன்றரை ஆண்டுகள் இக்கழகத்தை பூப்போல் வளர்த்துக்காட்டிமாபெரும்சாதனை புரிந்தார். இரவு 1 மணி 2 மணி வரை இக்கழக விசயங்களில் ஓவியர் பெனடிக்ற் உடன் சேர்ந்து பணியாற்றினார். இவர் கைதியாகும் முன்பு இன்றைய தமிழினத்தின் நிலையை அடிப்படையாக வைத்து ஒரு நாடகத்தையும் மேடையேற்றும் முயற்சியிலும் ஈடுபட்டு அது தொடர்பாக பல நூறு ரூபாக்களை செலவும் செய்திருந்த வேளை — தடுப்புக் காவலில் வைக்கப்பட்டார்.

---

**சங்கப் பலகை**

## பொற்கிழி

(நாடகம்)

ஆசிரியர்:— எஸ். பி. கே.
விலை 95 சதம்
வெளியீட்டோர்:- பாபுவெளியீடு தென்மட்டுவில் சாவகச்சேரி.

கடதாசித் தட்டுப்பாட்டினால் நூல்கள் வெளியிட விரும்புவோர் ஓய்ந்தது பாளை உட்கார்ந்தாள் சாணத்தி என்றிருக்க முப்பது பக்க நூல் ஒன்றை 95 சதத்திற்கு ஈழத்தமிழ் வாசகர்களுக்கு எழுத்தாளர் எஸ். பி. கே. தந்திருப்பது மிகவும் பாராட்டப்படத்தக்கது.

சிறுகதை கவிதை நூல்களை வெளியிட ஏற்படும் துணிவு நாடக நூல்களை வெளியிட ஏற்படுவதில்லை. நாடகங்களை மக்கள் பார்த்து ரசிக்கவே பெரும்பாலும் விரும்புவர். இது பழக்கதோஷம் போலும்.

சில எழுத்தாளர்கள் சமீப காலத்தில் நாடக நூல்களை வெளியிட்டு வருவதைக் காண்கிறோம். இது ஒரு திருப்பம் என்றும் கூறலாம். எழுத்தாளர் எஸ். பி. கே. 4முக்கிய பாத்திரங்களுடன் முப்பது பக்கங்களில் நல்ல நகைச் சுவைச் சம்பவங்களை நிறைத்திருக்கின்றார். மேலைநாட்டு நாடகமொன்றைப் படித்து முடிக்கும் உணர்வு ஏற்பட்டது. ஒரு எழுத்தாளனுக்கும் குடும்பத்தினருக்குமிடையே ஏற்படும் ஒரு சிறு சம்பவத்தை மட்டும்வைத்து எழுதி அதன் உள்ளீடு வெற்றிபெற உழைத்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவகுமார் சிரித்தான்!

எமது சிறுகதை

ஹா...ஹ...ஹ...ஹா— நிலவியிருக்கும் அமைதியை நிர்மூலமாக்குவதற்கு இப்படிச் சிரித்தான் சிவகுமார். அவனது அந்தச் சிரிப்பு பளிங்குக் கற்களும் பாறைக் கற்களும் கொண்டு செவ்வனே உருவாக்கப் பெற்றுள்ள அந்த மண்டபம் முழுவதும் முட்டி மோதி மிகப் பயங்கரமாக விஸ்வரூபம் எடுத்துக்கொண்டிருந்தது. எழில் வளம் சூழ் மறத் தமிழர் மண்ணின் வட பகுதியில் ஒரு நாள்....

சுழன்றடித்த சூறைக் காற்று, கருமுகில்களை இரு கூறுகளாக்கும் அவற்றின் நெட்டுயிர்ப்பை வெளிப்படுத்தும் பெருமின்னல், இடியிடித்து உலர்ந்துபோன பூமியை உவகைப்படுத்துவதுபோல சலனமெதுவும் அற்றிருந்த வடபகுதி மக்களின் தூய்மை உள்ளத்தில் பெருமழை கொட்டத் தொடங்கியது சிவகுமார் என்றதொரு பெயரால்.

நீதி சொல்பவர் தம் இருக்கையினின்றும் ஒரு முறை நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டார்.

“எக்காளமிடுவதற்கு இது ஏற்ற இடமல்ல— மேலும் சட்டத்தின் சந்நிதியாகையால் சரணடைந்துவிடு.”

கட்டியம் கூறுபவன் இப்படிக் கர்ஜித்தான்.

இருந்தும்... சிவகுமார் சிரித்தான்... சிரித்தான்... மிகப் பயங்கரமாகச் சிரித்துக்கொண்டிருந்தான்.

சிரிப்பிலே அவன் எதைச் சித்திரித்தான்?

மனிதன் என்று சொல்ல முடியாத மரத்துப்போன இதயம் கொண்ட 'மா'க்களைப் பார்த்துச் சிரித்தானா?

அரசுக்கு அனுசரணையாக அரசோச்சும் சட்டமென்கிற சர்வாதிகாரத்தைப் பார்த்துச் சிரித்தானா?

சமநீதி... சமத்துவம்... என்ற போர்வையில் தன் போன்ற சிறுபான்மையினத்தைப் பார்த்து சட்டம் சாவு வலைவிரித்திருப்பதை யெண்ணிச் சிரித்தானா?

ஏன் சிரித்தான்...சிவகுமார் ஏன் சிரித்தான்?

பார்வையாளர்கள் வரிசையில் கூடியிருந்த ஒரு சில பகுத்தறிவு வாதிகள் அவன் சிரிப்பையுற்றுச் சிந்தித்தவர்—ஆனல் அறிவு என்ற சொல்லுக்கு அர்த்தமேயில்லாத ஆண்டிகளோ நிந்தித்தனர்—நீதியை அவமதிக்கிறான் என்ற நிலையில்!

சட்டம்—அது இன்று ஒரு கயிறறுந்த பட்டம்!

தாய்ப் பசுவின் கதறல் கேட்டு தன்மகனையே தேர்ச்சில்லுக்கு காவுகொடுத்த மனுநீதிச்சோழன் சொன்னது சட்டம்! பிறமகன் சொல்கேட்டு தன்மனைவியையே காட்டுக்கு துரத்திய இராமன் இட்டது சட்டம்!

பிறர் மனைக் கதவு தட்டிய—பெருண்மையை ஒத்து தன் வலக் கரத்தையே வாளுக்கீந்த 'பொற்கைப் பாண்டியன்' செப்பிய வேதம் ஒரு சட்டம். ஆண்டியாயினும் சரி அரசனாயினும் சரி சமநீதி பேசவேண்டும் சட்டம் — ஆனல் இன்று ஆண்டிக்கொரு விதிமுறை அரசனுக்கு ஒரு வழிமுறை— அதனல் சிவகுமார் வாழ்ந்த நாட்டில் சட்டம் ஒரு கயிறறுந்தபட்டம்.

("'The law maker shold not be a law breaker!'")

“பொதுமக்களின் நண்பர்கள்—ஆனலும் சட்டத்தின் காவலர்கள்'—என்று தமக்கு அரசு குத்திய பட்டயத்தை வைத்து பாமர மக்களை ஏமாளியாக்கி இந்திரபோக வாழ்வு நடாத்தும் கோமாளிகள் தனக்கு எதிராக அவசரகாலச் சட்டத்தின் கீழ் சுமத்தியிருக்கும் குற்றச் சாட்டுக்களை எண்ணி எக்காளமிட்ட சிவகுமாரன் தனது சிரிப்பின் சுருதியை முற்ருகக் குறைத்தவனுக அங்கு கூடியிருந்தோரைக் கூர்ந்து நோக்கினன்.

தன்னுடன் கூடவே சிரித்தவர்கள்... சிந்தித்தவர்கள், நிந்தித்தவர்கள், இப்படிப் பலதரப்பட்ட பார்வையாளர்களின் உள்ளங்களை ஊடுருவுவது போலிருந்த அவனது பார்வை, ஈற்றில் நீதியின் முன்னே சென்று நிலைத்தது.

'புரட்சிக்காரன்' — முத்திரை குத்தப்பெற்றுள்ள முழுப்பெயர்!

'சதிகாரன்'—சட்டம் இப்படி அவனுக்கெதிராகச் சாவுமணியை அடித்தது.

அரசுக்கெதிராக மக்களைத் தூண்டியதாகவும், அரசமனை அதிகாரிகளை அவமதித்து குறிப்பிடத் தக்க ஒரு சிலரை 'சா' — எனும் கோடரி கொண்டு வெட்டிச் சாய்த்ததாகவும் அவன்மீது பட்டம் சுமத்திய பாராளும் மன்னன்—'பயங்கரவாதி'— என்ற மொத்தப்பெயரோடு நீதியின் முன்னே நிறுத்தியிருக்கிறன் நிர்கதியான நிலையில்!

இத்தனைக்கும் அவன் ஓர் ஏழைப் பத்திரிகாசிரியன்.

சொந்தப்பத்திரிகையின் துணைகொண்டு செய்தி என்ற பெயரால் அரசின் மீது சேற்றை வாரியிறைத்ததாகவும் விசேட தடைசெய்யப்பட்டுள்ள பத்திரிகை மசோதாவின் கீழ் புதிதொரு குற்றம் சோடிக்கப்பட்டு அவன் பத்திரிகையே அந்நாட்டில் வெளியிடத்தடை செய்யப் பட்டிருந்தது.

உலகம் அறியாத புதுமை?

சுதந்திர நாடு என்று சுலோகமிடும் அச்சுவர்க்க பூமி சொந்த நாட்டையே சுடுகாடாக மாற்றியது எப்போது?—எந்தக் கருத்தானலும் சொந்தக்கருத்தைச் சொல்வதற்குச்சோதனையா?

பாரபட்சமின்றி இயங்குவதுதான் பத்திரிகா தர்மமாயிற்றே — 'இல்லை, இது சட்டத்திற்குட் பட்டது'— என்று திருத்தப்பட்ட சட்டத்தை வைத்துச் சித்தாந்தம் பேசுகின்ற சினர் கூட்டம் தீட்டிய புதுமுறைச் சாசனம் 'புரட்சிக்காரன்'— என்று அவனுக்குப் புதுப் பெயர்—சூட்டியிருந்தது.

அவனுக்கெதிராகச் சோடிக்கப்பெற்றுள்ள குற்றச் சாட்டுகளுக்கான தீர்ப்பை எதிர்பார்த்து இன்று அவன் காத்திருந்தான். இதை எதிர்நோக்கி மண்டபத்தின் உள்ளும் புறமும் பல நூற்றுக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர். சிவகுமாரனுக்காக பல நூறு கருணை மனுக்கள் விண்ணப்பம் செய்யப்பட்டிருந்தன — ஆனல் இவை எதையும் தாங்கும் திடசித்தம் கொண்ட அந்த இரும்பு இதயம் விரும்பவில்லை. சுற்றிலும் குழுமியிருக்கும் பல நூறு நெஞ்சங்களின் கண்களில் கண்ணீர்— ஒவ்வொரு இதயங்களிலும் இதர பிறபகுதி ஆலயங்களிலும் அவனுக்காகப் பிரார்த்தனை நடைபெற்றுக்கொண்டிருப்பதை அவனும் உணர்ந்திருக்கவேண்டும் — இல்லையானல் இத்தனை நேரமும் வெறுமனே சோம்பியிருந்த அவன் கண்களிரண்டும் ஏன் கண்ணீர் திவலைகளைப் பெருக்க வேண்டும்? தனக்காகவா? இல்லை அந்த அன்பு இதயங்களுக்காக!

கடந்த பதினெட்டு தினங்களுக்காக நடைபெற்று வந்த விசாரணைகள் முடிவுற்று அன்று தீர்ப்பு வழங்கப்படவிருந்தது. இதுவரை தானும் தனக்காகத்தானே வாதாடினன் சிவகுமாரன்— வக்கீல் இல்லை, வாக்கு சாதுர்யத்தால்! அவன் குற்றவாளியென்று மிகப் பலமாக வாதாடினர் எதிர் வாதத்திற்குப் பேர்போன அரசுவக்கில் அம்பலவாணர்.

## திருமலை - இராசரத்தினம்

இவ்வழக்கினின்றும் எப்படியாவது தன்னை விடுவித்துக்கொள்ள வேண்டும் என்கிற ஒரே நோக்கில் பதில் வாதம் நிகழ்த்தினன் சிவகுமார். — காரணம். இன்னும் சில காலம் அவனது அற்ப உயிர் அந்த நாட்டு மக்களுக்காக வேண்டியிருந்ததுதான்.

திசைமாறி சீர்கெட்டுப் போன பல நூறு மக்களை ஒன்று திரட்டிச் சீர்செய்ய வேண்டும் — அப்படியானல் தான் அவனின் அந்த விடுதலைப் போராட்டம் அரசிடம் இருந்து ஒரு தீர்வை பெறமுடியும்! — மேலும்—

அந் நாட்டிலே பல் வேறு பகுதிகளிலும் பரந்து கிடக்கும் அவன் இன சமுதாயப் பரம்பரை!ஒருசில சுரண்டல் பேர்வழிகளையும், விடுதலைக்கு வித்திடுகிறேம் என்று ஒரு சில மக்களை அரசமனைவழிதிருப்பி தம்சொந்த நலனுக்கு நாலு சீர்வரிசை பெற்றிடும் சிறு நரிக்கூட்டத்தையும் இனம் கண்டு கொள்ளவேண்டும். அப்படியானல் அவனுக்கு அவன் எடுத்த முயற்சிக்கு முழு வெற்றி!

ஆனல் நடந்தது...?

நீதி சொல்பவர் தம் இருக்கையில் நிமிர்ந்து உட்கார்ந்துகொண்டு தம்குரலை ஒரு முறை சீர்செய்து கொண்டார் அவரிடமிருந்து வெளிப்பட்ட செருமல் ஒலி பார்வையாளர்களை ஒரு கணம் பரபரப்படையச் செய்தது. நீதியை நோக்க திராணியற்று நொடிந்து போன உள்ளத்துடன் சோம்பி—நிற்கும் பல நூறு கைதிகள் வரிசையில் நம் சிவகுமாரன் மட்டும் ஏனே திசைமாறி நின்ருன். எதையும் நேர்கொண்ட பார்வையோடு எதிர்நிற்கவல்ல அந்த இரும்பு இதயம் கொண்ட இளவலின் பார்வை நீதியின் முன்னே சென்று நிலைத்தது. — அப்பொழுது...

அமைதி! அமைதி! அமைதி!

அமைதியை அமைதி தழுவும் அதே வேளை. 'உனது ... சோடிக்கப் பெற்றுள்ள குற்றங்கள் யாவும் உண்மையானவை என விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது. சட்டப்படி உமக்கு யான் தண்டனையை ஏன் வழங்கக்கூடாது என்பதற்குக் காரணம் கூற முடியுமா?''

ஜுரர்களின் முடிவுஇப்படி கணீரென்றகுரலில் நீதியின் புறமிருந்துஎழுந்தது.எழுந்த பரபரப்பு ஏற்றம் காண முனையும் நேரம் சிவகுமார் பேசினன். அவனின் வார்த்தையில் தடுமாற்றம் இல்லை உறுதி அங்கேஓம்பி நின்றது.

“கனம் நீதிபதிஅவர்களே,

அரசமனை அதிகாரிகளினல் என் மீதுள்ள குற்றங்கள் ஜோடிக்கப்பெற்று அவற்றிற்கு 'தண்டனை.'' என்ற மொத்தப் பெயரை வாங்கித்தந்துவிட்டது எதிர் வழக்கறிஞரின் வாதம். வாதம் வலுப்பெற்று தண்டனை உறுதியாகும் இதே வேளை நான் எனது சாவைப் பற்றி அஞ்சவில்லை. சதா நேரமும் பிரபஞ்சத்தில் மரண எல்லையை நோக்கி விரையும் ஜீவன்களில் நானும் ஒருவன். இதனல் நான் இறப்பைப் பற்றி அஞ்சுவதில்லை. சாவுக்கயிற்றில் சரசமாடி அதன் மீளா சுகம்பெற்ற ஒரு நிரபராதியின் உயிரை உண்மை நீதி வெளியாகும்போது உங்களால் திருப்பித்தரமுடியாது என்றுதான் கூறுகிறேன். நான் இறந்துவிட்டால் என்னேடு என் ஆத்மாவோடு சங்கமமாகிவிட்ட நினைவுகளும் அழிந்துவிடும் என்று கனவு காணவேண்டாம். என் பொய்யுடம்பு மண்ணேடு மக்கி மறுவுற்ருலும் என் நினைவுகள் அழிவதில்லை. அவற்ருேடு ஒட்டி உறவாடி உயிரையும் பணயம் வைத்து வாழவல்ல இளைஞர் கூட்டத்தை ஒறுத்துச் செல்கிறேன் என்ற நிலையே எனக்குத் துன்பம்.''

இவ்விதம் கணீரென்ற குரலில் அவன் கூறிமுடிக்கவும் அவன் வாழ்வின் எல்லை இன்னும் சில நாட்கள் என்பதற்கு நீதிபதி விதந்துரை வழங்கி விடை பெறவும் சரியாக விருந்தது.

நீடித்த பெரும் குழப்ப நிலைக்கிடையே ஒருவர் ஓடோடி வந்து சிவகுமாரின் காதில் ஏதோ சொன்னர். அதைக் கேட்டதும் அவன் கடகடவென இடியிடியெனச் சிரித்தான். அவனின் அந்தச் சிரிப்பு மிகப் பயங்கரமாக அவ்வறையெங்கும் விஸ்வரூபம் பெற்றுக்கொண்டிருந்தது.

“சிவகுமார், பிரசவ வேதனையால் துடிதுடித்த உன் மனைவி மருத்துவ மனையில் ஒரு அழகான ஆண் குழந்தையை ஈன்று விட்டாள்.”—இப்படி அவன் காதில் ஒருவர் வந்து கூறியதுதான் தாமதம் இடியிடியெனச் சிரித்தான்.

—ஆம்... இறந்துகொண்டிருக்கும் தன் நினைவு நிழலின் பாதையில் வழி நடந்து அதைஇறவாப் பெருநிலைக்கு அழைத்துச்செல்லவல்ல ஒரு ஆண் குழந்தையை அடைந்துவிட்டான்.

திக்கற்று திசைமாறி நிற்கும் சமுதாயத்தை ஒன்றிணைத்து ஓம்பவல்ல ஒரு வழித் தோன்றலை பெற்றுவிட்டான். சாவு நிலை எதுவரினும் வாழ்வு நிலை தவருத அவன் —வழித்தோன்றலையல்லவா இக்குவலயத்தில் விட்டுச் செல்கிருன்!

கைதியை அழைத்துச் செல்கிருர்கள் காவலர்கள். வண்டி — உறுமி நிற்கிறது. சிறைவாசல் திறக்கிறது. நாட்கள் பறக்கிறது. கயிறு விழுகிறது. கழுத்து சிதைகிறது. பிறப்பிற்கும் இறப்பிற்கும் இடைப்பட்ட கால எல்லை முடிவுற்ற அதேவேளை அவன் இவ்வையத்தில் விட்டுச்சென்ற வழித்தோன்றல் கத்துகிறது—

“அம்மா”— புது வாரிசு பூத்துவிட்டது.

புரட்சி நடக்கிறது...பூகம்பம் வெடிக்கிறது...

—'இத்துடன் விட்டுச் செல்கிறேன் இந்தக் கதையை!'

# யாழில் எழுந்த தமிழோசை

—2-ம் பக்கத் தொடர்

படி நடத்திமுடிப்பதற்கு அறிவு, ஆற்றல், நிர்வாகத் திறமை, சுறுசுறுப்பு, அனைவரையும் தழுவிச்செல்லும் மனநிலை, இனிமையான சுபாவம், அடக்கம், இன்னும் இதுபோன்ற பல்வேறு பண்புகளும் நிறைந்திருக்க வேண்டும்! இத்தனை பண்பாடுகளும் திரு. சச்சிதானந்தம் அவர்களிடம் நிறைந்திருந்ததால்தான், உணவுப் பிரச்சினையில்— விருந்தோம்பலில்—யார் முகமும்கோணுமல் எல்லோரையும் மகிழ்வித்திட அவரால் முடிந்தது.

இதனல்தான்நான் முன்னரும் ஒரு தடவையும் குறிப்பிட்டதுபோல—தமிழ்ஈழம் தன்னுட்சி பெறும் போது, உணவுத்துறையை நிர்வகிக்கும் பொறுப்பை திரு. சச்சிதானந்தம் அவர்களிடம் நம்பிக்கையளிக்கலாம் என்று நான் கூறுகிறேன்.

விருந்துபசாரம் முடிந்ததா? இதோ வெளிநாட்டு அறிஞர்களுடன் சுற்றுலாவுக்கு வருமாறு அழைக்கிருர் போக்குவரத்துக்குப் பொறுப்பாளரான திரு. இ. பேரின்பநாயகம்! சுற்றுலாவின்போது சுவையான பல நிகழ்ச்சிகள் நமக்குக் காத்திருக்கின்றன.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

இலங்கைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

—5-ம் பக்கத் தொடர்

மடங்கு பன்னிரெண்டு மடங்கு அதிகரித்து விட்டது.

இந்த வாக்குறுதிகளை தேர்தல் காலத்திலும் சரி, சிம்மாசனப் பிரசங்கக் காலத்திலும் சரி, இதில் உண்மையில்லை வெறும் புழுகு; கட்டுக்கதை என்று கூறித் தமிழ் மக்கள் தட்டிக் கழித்ததைப்பெருமையுடன் கூற விரும்புகிறேன்.

தமிழ் மக்கள் பொருள்களின் விலை குறைவதை எதிர்க்கவில்லை. சோசலிச சமுதாயத்தைஅமைப்பதை எதிர்க்க வில்லை. ஆனுல் அவர்கள் நீங்கள் கூறிய வாக்குறுதிகளை வீண் புழுகு கட்டுக்கதை என்று உணர்ந்து அவற்றை நம்ப வில்லை. அவர்கள் அளித்த இன்னுமொரு வாக்குறுதியைப் பற்றிக் கூறி இந்தப் பழைய கதையை முடிக்க விரும்புகிறேன்.

ஒரு சோசலிச சமுதாயத்தை உருவாக்குவதற்காக மற்ற நாடுகளின் உதவியில் தங்கியிருக்காது நாங்களே அதனை உருவாக்குவோம் என்று கூறினுர்கள். இறுதியில் என்ன நடந்தது? அவர்களுடைய சோசலிசம், அவர்களுடைய முற்போக்குக் கொள்கை எல்லாம்

# தேசிய பேரவையில் தர்மலிங்கம்

மேற்கு ஜெர்மனி வைஸ் சன்சலர், ஈரான் மன்னர் ஷா முதலியவர்களது உதவிக்குள் அடங்கி விட்டது. அவர்கள் இந்த அரசாங்கத்துக்குப் பண உதவி புரிந்திராவிட்டால் இந்த வரவு செ[illegible]த்திட்டத்தை நிரப்பியிருக்க முடியாது. ஆட்சியை நடத்தியிருக்க முடியாத நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கும்.

சாதாரணமாக ஒரு வரவு செலவுத் திட்டம் இந்தச் சபையிலே சமர்ப்பிக்கப்படும் நேரத்தில் மக்கள் மனதில் ஒருவித ஏக்கமும் ஒருவித பரபரப்பும் ஏற்படுவது வழக்கம். அந்த வரவு செலவுத் திட்டத்திலே என்ன கொண்டுவரப் போகிறுர்களோ, மக்களுக்கு என்ன கஷ்டங்களை விளைவிக்கப் போகிறுர்களோ அல்லது மக்களுக்கு எத்தகைய நிவாரணம் அளிக்கப் போகிறுர்களோ என்று மக்களுடைய மனதிலே ஒருவித பரபரப்பு உண்டாவது வழக்கம். இந்த ஆண்டு இந்த வரவு செலவுத் திட்டத்தைக் கொண்டு வந்த நேரத்திலே நாம் அத்தகைய ஏக்கத்தையோ, பரபரப்பையோ மக்கள் மத்தியில் காணவில்லை. அது ஏன் என்பதைத் தான் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்ன நடக்கப்போகிறதென்பதை வர்த்தமானியில் தான் பார்க்கவேண்டுமென்ற காரணத்தினுல் எந்தவிதமான பரபரப்பும் மக்கள் மனதிலே இருக்கவில்லை. இன்னுமொரு கொஞ்சக் காலத்திலே என்னவோ எல்லாம் அரசாங்கம் செய்யப்போகிறதென்று பல பல கதைகள் நாட்டில் அடிபடுகின்றன. அரைக்கொத்தரிசியை வெட்டப்போகிறுர்கள்—பெற்ருேலின் விலையை உயர்த்தப்போகிறுர்கள் — 9வயதிற்குக் கீழ்ப்பட்ட பிள்ளைகளுக்குத்தான் சீனி விநியோகம் செய்யப்போகிறுர்கள் என்றெல்லாம் கதைக்கின்றுர்கள். அதற்கு நாம் வர்த்தமானியைத் தான் எதிர்பார்க்கவேண்டும். வரவுசெலவுத் திட்டத்தில் அதைக் கூறியிருக்க மாட்டார்கள். கூறியிருப்பார்கள் என்றுகூட நாம் எதிர்பார்க்க முடியாது!"

## மானம் விற்ற அதிபருக்கு மட்டக்களப்பு மாணவர்கள் பட்டைநாமம் சாத்தினர்!

ஈனப் பிறவிகள் சிலர் தமிழ் மானம் மிக்க மட்டு நகரிலுள்ள பிரசித்திபெற்ற கல்லூரியொன்றின் மாணவர்களை விற்றுப் பிழைப்பதற்கு துணிந்து விட்டார்கள். கல் நாட்டு விழா என்னும் பெயரில் கயவனையும் காக்காய் பிடிக்கிறுராம் அந்தக் கல்லூரி அதிபர்!

திருகோணமலை தொடக்கம் பொத்துவில் வரையும் வாழும் மானத் தமிழினத்தை உருவாக்கிய பெருமை மட்டு நகரில் புகழும் தொன்மையும் தமிழ் மணமும் மிக்க மத்திய கல்லூரிக்கே உரியது. மேலே காட்டிய எல்லை வரைக்கும் குறிப்பிட்ட இக்கல்லூரியின் பழைய மாணவர்கள் வசிக்கிறுர்கள். ஆனுல் இந்தக் கல்லூரியின் தற்போதைய அதிபராவதற்கு மட்டக்களப்பு எட்டப்பரை பந்தம் பிடித்து தமிழ் மானமே — தமிழ் இனமும் மொழியுமே உயிரைவிட மேலானது என வாழும் மாணவர்களை விற்று இலாபம் தேடியுள்ளார் அதன் அதிபர்.

பழைய மாணவர்கள்; ஏனைய சககல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்ருேர்கள் எவரையும் மதிக்காமல் புறக்கணித்துவிட்டு பந்தம் பிடித்துக்கொண்டார் அதிபர். மானத்தை விற்ற அதிபரின் ஈனத்தனமான போக்கை பொறுக்க முடியாமல் மாணவர்கள் இந்த விழாவை பகிஷ்கரித்து விட்டார்கள்.

கிழக்கு மாகாணத்தில் நட்சத்திரங்களாகப் பிரகாசிப்பவர்கள் இக்கல்லூரி ஈன்ற மாணவர்கள். தனக்கு விருப்பமான அந்தோணி முத்துக்களும், தலையில் முறுக்கேறப்பட்ட 'வேள்' களுமேஅதில்கலந்து கொண்டார்கள்.

— 'அமிர்தசுரபி'

கிங்ஸ்லி 5-வது வெற்றி வாரம்!
விஷ்ணுவர்தன, சந்திரகலா நடித்த-
சித்திராலயா அளிக்கும்
ஸ்ரீதரின் அலைகள்

4-வது வாரம்
கெப்பிட்டல்
சிவாஜி, லட்சுமி, விஜயகுமாரி, எஸ். வரலட்சுமி, முத்துராமன், சிவகுமார் நடித்த-
ராஜ ராஜ சோழன்
தென்னகத்திலேயே முதன்முதலாக தயாரித்த "சினிமாஸ்கோப்" தமிழ் வண்ணச் சித்திரம்.

2-வது வாரம்
பிளாஸா — வெலிங்டன்
ஜெய்சங்கர், பாரதி, சோ, மனேரமா, சுபா நடித்த
பொன் வண்டு

6-வது வாரம்
லிடோ [யாழ்நகர்]
சிவாஜி, கே. ஆர். விஜயா நடித்த-
கே. பாலசந்தரின் எதிரொலி

இப்பொழுது எதிரொலிக்கிறது!
செல்லமகால் 6-வது வாரம்
சந்தர்ப்பம்—சூழ்நிலையினுல் குற்றம் செய்தவர்கள் அதன் பலாபலன்களின் எதிரொலிக்கு தப்பமாட்டார்கள் என்பதை விளக்கும் சிறந்த குடும்பச் சித்திரம்.
சிவாஜி, கே. ஆர். விஜயா, நாகேஷ்
எஸ். எஸ். ராஜேந்திரன்,
லட்சுமி - சிவகுமார் - ஜோதிலட்சுமி,
காலஞ்சென்ற ரி. எஸ். பாலையா நடித்த-
கே. பாலசந்தரின் எதிரொலி
நீதிமன்ற வழக்கு விசாரணைக் கட்டங்கள் கட்டாயம் பார்க்கவேண்டியவை.

மலருக்கு மலர் தாவும் வண்டாக இருக்கவில்லை அவன்! மலர்களையே தன்னை நோக்கித் தாவச் செய்யும் மன்மதனுக விளங்கினுன்! முடிவு!
கெயிட்டியில் 2வது வாரம்
ரீங்காரமிடும் பொன் வண்டை தரிசியுங்கள்.
ஜெய்சங்கர், பாரதி,
மனேரமா, ஜெய்சித்ரா,
சுருளிராஜன், சோ நடித்த-
பொன் வண்டு
கேட்டு ரசிக்க தயாராகுங்கள்:- யாருக்காக, இந்த மாளிகை ரத்ன மாளிகை! பாடியவர்:- மனேரமா.

இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு பண்டாரநாயகாமாவத்தை 194 ஏ. இலக்கத்தில் 1974ம் வருடம் நவம்பர் மாதம் 17-ம் [illegible] அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org